

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2052 கீழறை ஆண்டு நளி நல்லோரை கார்த்திகைத் திங்கள் 2ம் நாள் (18-11-2021) நிறைமதி வெளியீடு +94 21 221 2739


## ஆறுமுகநாவலர் குருபூசை



நாவலர் பெருமானின் 142வது குருபூசைத் தினம் வருகின்ற கார்த்திகை மகம் விண்மீன் (நவ27) அன்று தென்னாட்டில் கொண்டாடப்படவிருக்கிறது. அத்துடன் மார்கழி 3 (டிச 18) அவரின் 199வது அகவைத் திரு நாளும் ஆகும்.

# ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியைப் போற்றும் திருவெம்பாவை

## விரதம் இம்முறை கார்த்திகை 25 (டிச 11) - மார்கழி 5 (டிச 20) ஆதிரை அருட்காட்சி



தென்னாடு ஐம்பூதநாதர்

திருவெம்பாவை, மார்கழித் திங்கள் திருவாதிரை விண்மீனுக்கு ஒன்பது நாட்களுக்கு முன் தொடங்கி சைவர்களால் கடைப்பிடிக்கப்படும் ஒரு விரதம். ஏன் வாழ்வியல் சடங்கு என்றே கூறலாம்.

பனி நிறைந்த மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் பொழுது புலர்வதற்கு முன் எழுந்து, ஒருவரையொருவர் துயிலெழுப்பி கூட்டமாகச் சென்று பொய்கையில் நீராடி இறைவன் புகழ்பாடி வழிபடும் வாழ்வியல் வழங்கங்களை திருவெம்பாவைப் பாடல்களில் குறிப்பிடுகின்றார் மாணிக்கவாசக சுவாமிகள்.

திருவெம்பாவை என்பது மாணிக்கவாசகர் சுவாமிகள் திருவண்ணாமலையைச் சென்று வழிபடும் போது பாடப் பெற்றவை. சிவனுக்குத் திருத்தொண்டு புரிவதையே வரமாகக் கேட்கிறது திருவெம்பாவை.

இக்காலத்தில் அதிகாலையிலே எல்லாக் கோயில்களிலும் சிவனுக்கு திருமஞ்சனம் மற்றும் பூசைகள் நடைபெறும். அதன் பின்னர் திருவெம்பாவை பாடல்கள் பாடப்பட்டு ஒவ்வொரு பாடல் முடிவிலும் சுவாமிக்கு படையல் மற்றும் பேரொளி வழிபாடு ஆற்றப்படும். உயிர் மும்மலங்களினின்றும் விடுபட்டு ஈடேற்றத்துக்கான முறைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்ற உயர்ந்த தத்துவத்தை திருவெம்பாவை பாடல்கள் எடுத்தியம்புகின்றன. திருவெம்பாவை காலத்தில் பல கோயில்களில் திருவாதவூரடிகள் புராணம் பாடப்பட்டு வருகின்றது.

அத்துடன் பல இடங்களில் இளையவர்கள் கூட்டம் கூட்டமாக திருப்பள்ளியெழுச்சி மற்றும் திருவெம்பாவைப் பாடல்களை பாடிக்கொண்டு ஊர்வலமாக வருவார்கள். அவர்களுடன் மற்றவர்கள் சங்கு, சேமக்கலம் மற்றும் இசைக்கருவிகளை வாசித்தவண்ணம் உரைச் சுற்றி வலம் வருவார்கள்.


இவ்விரதத்தினை மற்றும் வழிபாட்டினை சைவர்கள் அனைவரும் குறிப்பாகப் பெண்கள் கடைபிடித்து வையத்துள் வாழ்வாங்கு வாழ, மணிவாசகர் சொல்லும் வழியில் நின்று எல்லாம் வல்ல சிவபரம்பொருளின் அருளாசியை பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக் கொள்கிறோம்.



உத்தரகோசமங்கை மங்களநாதர்

# பழந்தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழா - கார்த்திகைத் தீபம்

## திருவண்ணாமலையில் கார்த்திகை 3 (நவ9) இலங்கையில் கார் 2



# கந்தன் கவின் அறுமைப் பெருநாள்



சிவத்திரு யாழவன் சிவவேதன்

கந்தன் கவின் அறுமைப் பெருநாள் என்பது முருகக்கடவுள் சூரனை அழித்த பெருமையை சைவ சமயத்தவர்கள் கொண்டாடும் ஒரு விழாவாகும். இது விரதமாகவும் விழாவாகவும் சைவர்கள் மத்தியில் கடைப்பிடிக்கப்படுகின்றது. அறுமை என்பது ஆறு நாட்களைக் குறிக்கின்றது. ஐப்பசித் திங்கள் மறைமதிக்கு அடுத்த நாள் முதல் அறுமைப் பிறைநாள் ஈறாக உள்ள ஆறு நாட்களும் கந்தன் கவின் அறுமைக் காலமாகும். இந்த ஆறு நாட்களையும் சைவர்கள் விரத நாட்களாகக் கருதி வழிபாடு இயற்றுகின்றனர். முருகப்பெருமான் சைவத்தமிழர்களால் தொன்று தொட்டு வழிபடப்படும் கடவுளாகத் திகழ்கின்றார்.

ஆறு நாட்கள் நடைபெற்ற சூரன் போரின் முடிவில் முருகன், மா மரமாக நின்ற சூரனை தன் சத்தியாகிய வேலினால் பிளந்தார். பிளவுபட்ட மாமரம் சேவலும் மயிலுமாக மாறவும், சேவலை கொடியாகவும் மயிலை வாகனமாகவும் முருகன் ஏற்றுக்கொண்டார். இது கந்தபுராணத்தில் சொல்லப்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும்.

கந்தபுராணத்தில் வரும் சூரன், சிங்கமுக சூரன், தாரகாசுரன் ஆகியோர் முறையே சைவ சித்தாந்தத்தில் பேசப்படும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களைக் குறிப்பதாகக் கருதப்படுகின்றது. ஆன்மாவைத் துன்புறுத்தும் மலங்களின் கெடுபிடியில் இருந்து ஆன்மாவுக்கு விடுதலை அளிப்பதோடு ஆணவமலத்தின் பலத்தைக் குறைத்து அதனைத் தன் காலடியில் இறைவன் வைத்திருப்பதை உணர்த்துவதே சூரன் போராகும்.

முருகன் சூரனை அழித்து ஒழித்த செய்தி சங்க இலக்கியங்கள் தோறும் பேசப்படுகின்றது. சங்க இலக்கியத்தில் ஒரு காட்சி. ஒரு தலைவன் கையில் ஓர் மலருடன் ஒரு தோழியை நோக்கி வருகின்றான். அந்த தோழி தலைவனை பார்த்து கையில் என்ன என்று கேட்கின்றாள். செங்காந்தள் பூ இதை தெரியவில்லையா என்று தலைவன் பதில் உரைக்கின்றான். அது தெரிகிறது இது எதற்கு என்று அந்த தோழி கேட்கின்றாள். ஓர் ஆண் கையில் பூவோடு வருவது எதற்கு என்று ஓர் அசட்டு சிரிப்புடன் அவன் பதில் கூறுகின்றான். உடனே தோழி" ஒகோ நீ எனது தலைவியை காதலிக்கின்றாயா? அதற்காக இந்த பூவை கொடுக்க சொல்லி கேட்கின்றாயா?" என்று வினவுகின்றாள். தலைவன் ஆம் என்று சொல்லிவிட்டு மெதுவாக நகைக்கின்றான்.

தோழி கேட்கின்றாள். இது யாருடைய மலை என்று தெரியுமா? எம் தெய்வம் யார் என்று உனக்கு தெரியுமா? தலைவன் ஓர் சிறு பயத்துடன் தோழியை நோக்குகின்றான். இந்த இடத்தில் தான் மேற்படி பாடல் தொடங்குகின்றது. எம் தெய்வம் முருகன். அவன் எப்படிப்பட்டவன் தெரியுமா? போர்க்களம் இரத்தத்தால் ஊறி சிவப்பாகுமாறு சூரர்களோடு போரிட்டு பலி கொண்டவன். அவுணர்களின் இரத்தம் தோய்ந்த சிவப்பு அம்பினை கையில் பிடித்தவன். யானை மீது ஏறி ஊர்ந்து வருபவன். வீரம் நிறைந்த வளை உடையவன். அவனுடைய குன்று இது. இரத்தத்தால் தோய்ந்த செங்காந்தள் பூக்கள் இங்கு நிறைய உண்டு. உன்னுடைய பூ இங்கு தேவையில்லை ஆகவே போய் வா என்று தோழி உரைக்கின்றாள்.

**"செங்களம் படக்கொன்று, அவுணர் தேய்த்த**
**செங்கோல் அம்பின் செங்கோட்டு யானை**
**கழல் தொடி சேய் குன்றம்**
**குருதிப் பூவின் குலை காந்தட்டே "**

என்ற இந்தப் பாடலை சங்க இலக்கியங்களில் ஒன்றான குறுந்தொகை பதிவு செய்கின்றது. அப்பர் பிரானும் தன்னுடைய தேவாரத்தில், முருகன் சூரனை அழித்ததை பின்வருமாறு பதிவு செய்கின்றார்.

**"சமர சூரபன் மாவைத் தடிந்தவேற்**
**குமரன் தாதைநற் கோழம்பம் மேவிய**
**அமரர் கோவினுக் கன்புடைத் தொண்டர்கள்**
**அமர லோகம தாளுடை யார்களே."**

இதன் பிறகு வந்த கச்சியப்பர் முருகனுடைய கதையை மா காதையாக இயம்பிச்சென்றார். அந்த நூலின் பெயர் தான் கந்த புராணம். சைவசித்தாந்தத்தின் அடிப்படையில் எல்லாம் வல்ல இறைவன் ஆணவம், கன்மம், மாயை போன்ற சூரர்களை அழித்து வெற்றி பெறுவதே இந்த வழிபாட்டின் நோக்கம். முப்புர சூரர்களை ஈசன் அழித்ததும் இதையே குறிக்கின்றது. ஈசன் முப்புர சூரர்களை அழித்ததை,

**"அப்பணி செஞ்சடை யாதி புராதனன்**
**முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்**
**முப்புரமாவது மும்மல காரியம்**
**அப்புரம் எய்தமை யாரறிவாரே"**

என்று திருமூலர் குறித்துப் போகின்றார்.

கந்தன் கவின் அறுமைத் திருநாளின் ஆறு நாட்களும் சைவர்கள் விரதமிருந்து அதிகாலையில் எழுந்து நீராடி பூரண கும்பம் வைத்து விளக்கேற்றி பூசை வழிபாடு செய்வர். பகற்பொழுதில் உணவருந்தாமல், இரவில் பால், பழம் மட்டும் அருந்தி ஏழாம் நாள் பாரணை அருந்தி விரதத்தை நிறைவேற்றுவர். அதிலும் சிலர் ஆறு நாட்களும் மிளகு நீரை மட்டுமே அருந்தியும் வழிபாடு இயற்றுவார். கோயில்களில் இடம்பெறும் கந்த புராணப் படிப்பு மற்றும் திருமுறை ஓதல் போன்றன இக்காலத்தின் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சிகள். இறுதி நாள் சூரன் போர் இடம்பெறும். முருகன் சூரனை அழித்தமையை நினைவு கூறும் விதமாக நடைபெறும் இந்த நிகழ்வின் இறுதியில் சேவலாகவும் மயிலாகவும் மாறி சூரன் தோல்வியை ஒத்துக்கொள்வான்.

**"தித்தித்தெய ஒத்தப் பரிபுர**
**நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி**
**திக்கொட்கந டிக்கக் கழுகொடு... கழுதாடத்**
**திக்குப்பரி அட்டப் பயிரவர்**
**தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு**
**சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக... எனவோதக்**
**கொத்துப்பறை கொட்டக் களமிசை**
**குக்குக்குகு குக்குக் குகுகுகு**
**குத்திப்புதை புக்குப் பிடியென... முதுகூகை**
**கொட்புற்றெழ நட்பற் றவுணரை**
**வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி**
**குத்துப்பட ஒத்துப் பொரவல... பெருமாளே."**

என்று அருணகிரி நாதரும் வேலவனின் போர் வல்லமையைப் பறையறைந்து போக்கின்றார். நாமும் முருகனின் அடியிணைப் போற்றி மும்மலங்களை அழித்து வீடு பேறு பெறுவோம்.

**"ஆதியருள் ஆசனம் அமர்ந்த பெருமாளே"**

**திருச்சிற்றம்பலம்**

# பொறுப்பேற்றார் நல்லையின் புதிய நிர்வாகி



நல்லூர் ஆலயத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரியாக இருந்த சிவத்திரு. குமாரதாசமாப்பாண ஐயா 2021-10-09 அன்று இறைவனடி சேர்ந்தார். நல்லூர் ஆலயத்தின் பதினோராவது நிர்வாக அதிகாரியாக சிவத்திரு. குமரேசு சயந்தன் குமாரதாச மாப்பாண ஐயா அவர்கள், 2021-10-24 அன்று பொறுப்பேற்றார்.


நல்லூர் ஆலயத்திற்குச் சென்ற குமரேச சயந்தன் குமாரதாச மாப்பாண முதலியார் பூசை வழிபாடுகளிலும் ஈடுபட்டு தனது பொறுப்பினை ஆரம்பித்தார். இதனைத் தொடர்ந்து தனது கடமையினை பொறுப்பேற்ற குமரேச சயந்தன் குமாரதாச மாப்பாண முதலியார் அவர்கள் தொடர்ந்து நிர்வாகத்தினை நடாத்திச் செல்வார்.

அத்தோடு தனது முதல் திருப்பணியாக நல்லூர் ஆலயத்தின் வட பகுதியிலுள்ள திருமஞ்சன நந்தவனத்தின் பக்கமாக குமார இராசகோபுரம் எனும் திருப்பெயரில் திருக்கோபுரம் ஒன்றினை அமைக்க அடிக்கல் நாட்டியுள்ளார்.

**திருச்சிற்றம்பலம்**


**"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"**

# இம்முறையும் சிறப்பாக இடம்பெற்றது திருச்செந்தூரின் சூரன் போர்



கொவிட் மற்றும் மழை அனர்த்தங்களுக்கு இடையிலும் திருச்செந்தூர் முருகன் கோயில் சூரன் போர் நிகழ்வு வெற்றிகரமாக இடம்பெற்றது. சிக்கலில் வேல் வாங்கி செந்தூரில் போரிட்டான் முருகன். ஆணவ மலத்தை பிரதிபலிக்கும் சூரனை போரிட்டு அடக்கிய பின்னர் செந்தூரிலே சிவபூசை செய்தான் முருகன். இன்றும் சூரன் போர் நிகழ்வுகள் எல்லாக் கோயில்களிலும் தவறாமல் இடம்பெற்று வருகின்றன. தமிழர் இருக்கும் இடமெல்லாம் தமிழ்க்கடவுள் முருகன் இருப்பான். அந்த வகையில் உலகெங்கிலும் சூரன் போர் சிறப்பாக இடம்பெற்ற அதே வேளை செந்தூரிலும் வெகு சிறப்பாக இடம் பெற்றது.

# நல்லையின் சூரன் போர்



ஈழத்தின் சைவக்கோயில் எனச் சிறப்பிக்கப்படும் நல்லைக்கந்தனின் சூரன் போர் ஐப்பசி இருபத்து நான்காம் நாள் (2021-11-10) புதன் கிழமையன்று இடம்பெற்றது. கொவிட் பரவல் காரணமாக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டாலும் அதைத்தாண்டியும் வெகு சிறப்பாக இடம்பெற்றது.

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்

## அருள்மிகு அஞ்சனாட்சி அம்மை உடனுறை விருந்திட்ட ஈசுவரர் (கச்சபேசுவர்) திருக்கோயில் - திருக்கச்சூர்

## (தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 259வது திருக்கோயில் திருக்கச்சூர்)

### கச்சன் சிவனைப் பூசித்த திருத்தலம் திருக்கச்சூர்

ஒன்றாய் அரும்பி, பலவாய் விரிந்து, பாரிடை ஐந்தாக பரந்தவன் ஈசன். அவன் உறையும் சீர்மிகு பதிகளில் பாடல்பெற்ற தொண்டை நாட்டில் அமைந்துள்ள தலங்களில் 259 திருத்தலம் திருக்கச்சூர் ஆகும். மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புடன் இயற்கை எழில் கொஞ்சும் சிவத்தலமான இத்தலத்திற்கு வந்து வழிபடுவோர், வாழ்நாளில் என்றும் உணவு கிடைத்து, பசிப்பிணி நீங்கி, அன்னம் பாலிக்கும் தில்லை சிற்றம்பலத்தவனின் நல்லருள் பெற்று வாழ்வார்கள் என்பது ஐதிகம்.

### அமைவிடம்: (செங்கல்பட்டு - தமிழ்நாடு)

சென்னை - செங்கல்பட்டு புகையிரத வழியில் உள்ள சிங்கப்பெருமாள் கோவில் புகையிரத நிலையத்தில் இருந்து சுமார் 2 கி.மீ தொலைவில் இந்த சிவபுரங்களில உள்ளது. தேசிய நெடுஞ்சாலையில் சிங்கப்பெருமாள்கோவில் சென்று அங்கிருந்து திருப்பெரும்புதூர் (ஸ்ரீபெரும்புதூர்) செல்லும் சாலையில் சென்றால் திருக்கச்சூர் கோவிலை அடையலாம். இந்தக்கோவில் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி




வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் திறந்திருக்கும்.

இங்கிருந்து சற்று தொலைவில் உள்ள மலையடிவாரத்தில் மருந்தீசர் கோயில் என்ற மற்றொரு சிவன்கோவிலும் உள்ளது.

**இறைவன் திருப்பெயர்:** விருந்திட்ட வரதர், கச்சபேசுவர், அமுதத்தியாதர், கச்சூரெம்மான், விருந்திட்ட ஈச்வரர் (விருந்திட்டவீசர்) - (சுயம்பு இலிங்கம்)

**இறைவி திருப்பெயர்:** அஞ்சனாட்சி அம்மை, கன்னி உமையான்

**கோவில்மரம் :** கல்லாலமரம், வேர்ப்பலா, ஆல்

**திருக்குளம் :** ஆமைக்குளம்

**வழிபட்டோர்:** திருமால், சுந்தரமூர்த்தி நாயனார்,, திருநாவுக்கரசர்

**புராணபெயர்:** நடனவினாத நல்லூர், ஆதிகாஞ்சி, ஆலக்கோயில்

**பாமாலை:** சுந்தரமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசர், சேக்கிழார் பெருமான்

### நாயன்மார்களால் பாடப்பட்ட திருப்பதிகங்கள்

### சுந்தர மூர்த்தி நாயனாரால் பாடப்பட்டத் திருப்பதிகம்

**"முதுவாய் ஓரி கதற முதுகாட்**
**டெரிகொண் டாடல் முயல்வானே**
**மதுவார் கொன்றைப் புதுவீ சூடும்**
**மலையான் மகள்தன் மணவாளா**
**கதுவாய்த் தலையிற் பலிநீ கொள்ளக்**
**கண்டால் அடியார் கவலாரே**
**அதுவே ஆமா றிதுவோ கச்சூர்**
**ஆலக் கோயில் அம்மானே."**

### திருநாவுக்கரசரால் பாடப்பட்டத் திருப்பதிகம்

**"எச்சில் இளமர் ஏம நல்லூர்**
**இலம்பையங் கோட்டூர் இறையான் சேரி**
**அச்சிறு பாக்க மளப்பூர் அம்பர்**
**ஆவடு தண்டுறை அழுந்தூர் ஆறை**
**கச்சினங் கற்குடி கச்சூர் ஆலக்**
**கோயில் கரவீரங் காட்டுப் பள்ளி**
**கச்சிப் பலதளியும் ஏகம் பத்துங்**
**கயிலாய நாதனையே காண லாமே."**

### திருத்தலச் சிறப்பு

முன்னொரு நாளில் அமரர்களும் அவுணர்களும் அமுதம் வேண்டி அரங்கன் துணையோடு மந்தார மலையை மத்தாயும், வாசுகியை கயிராயும் கொண்டு பாற்கடலை கடைந்திட்ட போது மந்தாரமலையை தாங்குகின்ற வல்லமையைப் பெறவும், கடையும் போது அமுதம் திரண்டு வருவதற்காகவும் கச்சப்ப வடிவிலான (ஆமை வடிவம்) திருமால் இறைவனை வழிபட்டு உய்ந்தமையால், புராணச்சிறப்பு மிக்க இப்பதி திருக்கச்சூர் எனபெயர் பெற்றது.

இது காஞ்சிபுரம் மாவட்டத்தில் செங்கற்பட்டு வட்டத்தில் அமைந்துள்ளது. இங்கே சண்டேசுவரர் நான்கு முகத்துடன்



காட்சி தருகிறார். அந்தணர் வேடத்தில் வந்து இறைவன், சுந்தரரின் பசி தீர்த்தமை மற்றும் திருமால் கச்சப (ஆமை) வடிவில் இருந்து வழிபட்டமை ஆகியன இத்தலத்தில் நிகழ்ந்தன என்பதும் தொன்நம்பிக்கை.

அப்பர் பிரான் அம்பலத்துறை அமுதன் எழுந்தருளுகின்ற சிவாலயங்களை போற்றிப் பாடுகையில் திருக்கச்சூரையும் இணைத்துப் பாடி இறைவனை பணிந்துள்ளார்.

**"எச்சில் இளமர் ஏம நல்லூர்**
**இலம்பைங் கோட்டூர் இறையான் சேரி"**

மருந்தாக அமைந்து மருள் நீக்கும் மகேசன் திருக்கழுகுன்றத்தில் இருந்து திருக்கச்சூரை நோக்கி வரும் சுந்தரமூர்த்தி நாயனாரின் பால் அருள்புரிந்த அருட்தலமாயும் கச்சூர் மிளிர்கிறது. ஆலக்கோயில் அமுதனை தொழுது மதிற்புறத்தில் பசியால் துவண்ட வண்ணம் முகம் மிகவாடியிருந்த சுந்தரரின் பால் தாயினும் நல்ல தலைவனான ஈசன் மனம் வெதும்புகிறார். இக்காட்சியை பெரியபுராணத்தில் சேக்கிழார் செவ்வனே அரை ஓவியமாக தீட்டியிருக்கிறார் பாருங்கள்.

**"வன்கொண்டர் பசி தீர்க்க மலையின்**
**மேல் மருந்து ஆனார்**
**மின்தங்கு வெண்தலையோடு ஒழிந்து**
**ஒரு வெற்றோடு ஏந்தி**
**அன்று அங்கு வாழ் வாழ்வார் ஓர்**
**அந்தணராய் புறப்பட்டுச்**
**சென்று அன்பர் முகம் நோக்கிக்**
**அருள் கவறச் செப்புவார்"**

வெதுப்பிய வேதமுதல்வன் தூக்கியதிருவடிகள் நோவ சுந்தரர் பொருட்டு, ஆடவல்லான் அந்தணணாகி திருக்கச்சூரில் அங்கமும் வேதமும் அரன்மேல் அன்புபூண்ட அடியவர்களின் வீடு தோறும் சென்று அடிசில் பெற்று சுந்தரர் வயிற்றுப்பிணியை நீக்கி அருள்கிறார். அந்தணனாய் வந்து அமுதிட்ட அங்கணன் மீது நெகிழ்வுற்றவராய் உண்டு முடித்தபின் சுயஉணர்வு கைவரப் பெற்ற சுந்தரர் அடியவர்களைத் தேடி நிதர்சனத்தை அறிந்து இறையுணர்வு நீக்கி, இறையுணர்வு பெருகிடசெய்திட்ட ஈசனை போற்றி,

**"முதுவாய் ஓரி கதற முதுகாட்**
**பெரிகொண் டாடல் முயல்வானே"**

என துவங்கும் பதிகம் பாடிப்பரவி நிற்கிறார். இவ் வற்புறுத்தல் இன்றும் இச்சிவாலய திருவிழாவின் 94ம் நாள் கிரியையாக இடம்பெறுகின்றமை குறிப்பிடதக்கது.

### திருக்கோயில் அமைப்பு

திருக்கச்சூர் ஆலயத்தின் சிறப்பம்சங்களாக கருவறை ஆனது அகழி வடிவில் அமைக்கப்பட்டிருப்பதோடு, இறைவன் தான்தோன்றியாக அருள்புரிவதுமாகும். பலவித கலைநயங்கள் நிறைந்த தூண்கள் மனதை மயக்க வல்லன. கழுவாய்(பிரதோச) நாட்களில் கச்சப் தீர்த்தத்தில் நீராடி சிவசிந்தனையோடு அங்கு எழுந்தருளும் ஈசனை வணங்கினால் அனைத்து தோசங்களும் அகன்று விடுவதோடு செல்வம், கல்வி, இன்பம் முதலியவை கிட்டும் என்பது காலம் காலமாய் நம்பப்படுகிறது. கச்சப்ப வடிவிலான திருமாலுக்கு அருளிய இறைவன், அவருக்காய் இத்தலத்தில் திருத்தாண்டவம் (அஜபா நடனம் ) ஆடி அருள் நல்கியுள்ளமையால், இத்தலம் உபவிடங்கத் தலங்களில் ஒன்றாயும் கருதப்படுகிறது.

திருக்கச்சூர் தலம் ஆலக்கோயில் என்ற பெயருடனும் அழைக்கப்படுகிறது. இக்கோயிலின் மூலவர் கச்சபேசுவரராக





ஆலவாய் அமுதன்

இருந்தாலும், இக்கோயில் தியாககேசப் பெருமான் திருக்கோயில் என்றே அழைக்கப்படுகிறது. தொண்டை நாட்டிலுள்ள பாடல் பெற்ற சிவத்தலங்களில் தியாககேசப் பெருமான் சந்நிதி உள்ள கோயில்களில் இத்தலக் கோயிலும் ஒன்றாகும். கிழக்கு திசை நோக்கி அமைந்துள்ள இந்த கோயிலிற்கு கோபுரமில்லை. கோயிலுக்கு எதிரில் ஒரு பெரிய குளம் இருக்கிறது. இது கூர்ம (ஆமை) தீர்த்தம் என்று வழங்கப்படுகிறது. திருமால் ஆமை வடிவம் எடுத்தபோது இக்குளத்தை உருவாக்கியதாக கருதப்படுகிறது. இக்குளத்திற்கு அருகில் தான் சுந்தரர் பசிக் களைப்பால் படுத்திருந்த 16 கால் மண்டபம் இருக்கிறது. மண்டபத் தூண்களில் அழகிய சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

கிழக்கிலுள்ள நுழைவாயில் வழியாக உள்ளே சென்றவுடன் கிழக்கு வெளிவீதியில் கொடிமரம், நந்தி, பலிபீடம் ஆகியவை அமைந்துள்ளன. தெற்கு வெளிவீதியில் 27 தூண்களை உடைய நட்சத்திர மண்டபம் உள்ளது. நட்சத்திர மண்டபத்தைக் கடந்து நேரே சென்றால் தியாககேசப் பெருமான் சந்நிதி உள்ளது. இவர் உபயவிடங்கர் எனப்படுகிறார். நட்சத்திர மண்டபத்தில் உள்ள ஒரு தூணில் ஆமை உருவில் திருமால் சிவலிங்கத்தை வழிபடும் சிற்பம் ஒன்று உள்ளது.

மண்டபத்தில் உள்ள தெற்கு வாயில் வழியே உள்ளே சென்றால் இறைவி அஞ்சனாட்சி அம்மையின் சந்நிதி உள்ளது. நான்கு திருக்கரங்களுடன் நின்ற நிலையில் அம்மை அருள்பாலிக்கிறாள். வலம் வருவதற்கு வசதியாக அம்மன் சந்நிதி ஒரு தனிக் கோயிலாகவே உள்ளது. அம்மை சந்நிதி முன் உள்ள மண்டபத்திலிருந்து மற்றொரு கிழக்கு நோக்கிய வாயில் வழியாக உள்ளே சென்றால் கருவறையில் கிழக்கு நோக்கிய சந்நிதியில் இறைவன் கச்சபேசுவரர் காட்சி தருகிறார். திருமாலுக்கு அருளிய இவர், ஓர் தான்தோன்றி இலிங்கமாவார். கருவறை சுற்றில் தென்கிழக்கில் வடக்கு நோக்கிய நால்வர் சந்நிதியைக் காணலாம். கருவறை சுற்று வலம் வரும்போது வடக்குச் சுற்றின் வடகிழக்கு மூலையில் நடராசர் சந்நிதி அமைந்துள்ளது. கருவறை கோட்ட



மூர்த்திகளாக விநாயகர், தட்சினாமூர்த்தி, திருமால், நான்முகன், மலைமகள் ஆகியோர் உள்ளனர்.

வடக்கு வெளி வீதியில் கிழக்கு நோக்கிய முருகன் சந்நிதியும், விருந்திட்ட ஈசுவரர் சந்நிதியும் அமைந்திருக்கின்றன. விருந்திட்ட ஈசுவரர் சந்நிதிக்கு அருகே வடக்கு நோக்கிய சுந்தரர் சந்நிதியும் அமைந்துள்ளது. வடக்கு வெளி வீதியில் தெற்கு நோக்கிய பைரவர் சந்நிதியும் இருக்கிறது. இத்தலத்திலுள்ள இந்த பைரவர் சந்நிதி மிகவும் சிறப்பு வாய்ந்தது. இத்தலம் ஒரு திருப்புகழ் வைப்புத் தலம். இங்கு முருகப் பெருமான் ஒரு முகமும், நான்கு திருக்கரங்களும் கொண்டு இரு தேவியருடன் எழுந்தருளியுள்ளார். இத்தலமரமான ஆலமரம் மகம் விண்மீனுக்குரிய மரமாகும், ஆகவே மகம் விண்மீனில் பிறந்தவர்கள் இத்தல இறைவனை வழிபடுவது மிகவும் விசேடமானதாகும்.


அது மட்டுமன்றி இத்தலம் ஆலக்கோயில், மருந்தீசர் கோயில் என இரண்டாகவும் பிரித்து போற்றப்படுகின்றன. திருக்கச்சூர் கோயிலின் இணைக்கோயிலான மலைக்கோயில், ஆலக்கோயிலில் இருந்து சுமார் 1 கி.மி. தொலைவில் அமைந்துள்ளது. இக்கோயிலில் குடிகொண்டிருக்கும் இறைவன் மருந்தீசுவரர் என்றும் இறைவி இருள்நீக்கிய அம்மை என்றும் அழைக்கப்படுகின்றனர். நாமும் திருக்கச்சூர் மேவும் கச்சபேசுவரையும் மருந்துக்கோயில் மருந்தீசனையும் அவர்களருலாலே அவர் தாள் பணிந்து உய்வடைவோம்.

**"விடையுங் கொடியுஞ் சடையும் உடையாய்**
**மின்னோர் உருவத் தெளியானே**
**கடையும் புடைசூழ் மணிமண் டடமுங்**
**கன்னி மாங் கலந்தெங்கும்**
**புடையும் பொழிலும் புனலுந் தழுவிப்**
**பூமேல் திருமாமகன் புல்கி**
**அமையங் கழசிப் பழக் கச்சூர்**
**ஆலக் கோயில் அம்மானே."**

திருச்சிற்றம்பலம்




சிவத்திரு. சிவ செந்தமிழாதன்,
தலைவர் – சைவ மாணவர் சபை,
(பதிவு–HA/4/JA/343)
0715588737, aathan@thennadu.org



# தண்டியடிகள் வழி நடப்போம்!

ஐப்பசி எம்மை அரவணைக்கின்றது. மாரி தொடங்கி மண்ணில் மழை எங்கும் பொழிகின்றது. ஊரெல்லாம் வெள்ளம் ஓடி வழிய இடமின்றி முட்டி மோதி நிற்கிறது. வானம் தரும் அமுதத் துளிகளை முறைப்படி சேர்த்து வைக்க, தக்க வழியின்றி பொறியியலாளர்கள் என்று தம்மை சொல்லிக் கொள்பவர்களும், பொறுப்பான அதிகாரத்தில் உள்ளோரும் திணறி நிற்கின்றனர். மழையின்றிப் போனால் பயிர்கள் வாடும், உயிர்கள் சாகும்! அதே மழை வரம்பின்றி பொழிந்தாலும் இதே விளைவைத்தான் நாம் அனுபவிக்க நேரும். முளைவிட்டெழும் நெல் வயல் எல்லாம் தலைமுட்ட வெள்ளம் தேங்கி அழுகிப்போகும். பிற பயிர்களும் பயன் தரமுன் பழுது படும். உயர்ந்த நீர் மேலாண்மை இல்லாது போனால், வானம் வழங்கினும் பசும் புல் தலைகாண்பது அரிதேயாகும்.

குட்டை நிறைந்து, குளம் நிறைந்து, ஊரணி முட்டி, ஏந்தல் நிரம்பி, தாங்கல் அடைந்து, கரணை, கண்மாய் வழியே ஏரி பெருகி நீர் ஆற்றை அடைய வேண்டும் என்பதே பழந்தமிழரின் நீர் நிறைப்பு ஒழுங்காகும். ஈழத்தவர்களை பொறுத்தவரையில் எல்லா நீர்த்தேக்கங்களையும் குளம் என்றே அழைத்து பழக்கப்பட்டவர்களானோம். எனவே நீர் ஏந்தும் அளவை வைத்து நீர் நிலைகளை மேற்கண்டவாறு வகைப்படுத்தும் திறம் அறிந்திலோம். எனினும் நம் பழந்தமிழ் இலக்கிய செய்திகளின் வழியே அவற்றை நம்மில் சிலர் தெரிந்து வைத்துள்ளோம். 'அறையும் பொறையும் மணந்த தாய எண்நாள் திங்கள் அணைய கொடுங்கரை தென்நீர்ச் சிறுகுளம்..' என்று கபிலர் சங்கப்பாடலில் எட்டாம் பிறையைப்போல ஏரி அமைய வேண்டும் என்று கருத்துப் பகிர்ந்திருக்கிறார். ஒரு தமிழ் கற்ற புலவர் கூட நீர் மேலாண்மை பற்றி அறிந்து வைத்திருக்கும் அளவுக்கு பழந்தமிழர் நீர் மேலாண்மை, சிறந்தும் பரந்தும் இருந்தது! ஆனால் இன்றைய நிலைதான் என்ன?

குளங்களை நிரவி குடியிருப்புக்களையும், வணிகத் தொகுதிகளையும் அமைத்தோம். நீரோடும் நிலங்களுக்கு குறுக்காக சீமந்து சுவர்களை எழுப்பினோம். விரும்பியபடி வீதிகளை உயர்த்தி அமைத்தோம்! குளங்களின் பெயர்களாலேயே குறிப்பிடப்படும் ஊர்களில், குறித்த குளத்தையே காணாமல் போகச் செய்தோம்! பிளாத்திக்கழிவுகளாலும், சாக்கடை நீராலும் குளங்களை நிறைத்துக் கண்ணிருந்தும் குருடர்களானோம். தமிழ் எங்களுக்கு தந்ததையும் இழந்தோம்! சைவம் எங்களுக்கு சொன்னதையும் மறந்தோம்!

ஒரு நீர் தேக்கம் எவ்வளவு முக்கியமானது என்பதை சைவத்தமிழ் தொன்குடிகள் அறிந்திருந்தார்கள். அதனாலே தான் திருக்கோயில்கள் தோறும் தெப்பக் குளங்களையும் கேணிகளையும் அமைத்து நீரை சேமிக்கும் அவசியத்தை இந்த சமூகத்திற்கு வெளிப்படுத்தினார்கள். அதிலும் ஒரு படி உயர்வாக, திருவாரூரிலே பிறவியிலே பார்வை இழந்து, குளம் எப்படி இருக்கும், நீர் எப்படி இருக்கும் என்று கூட தெரியாத திருத்தண்டியடிகள் குளத்தைப் புனரமைத்து இறைவனின் பேரன்பைப் பெற்று அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர் ஆனார். சமணர்கள் தமிழகத்தில் தலைதூக்கியிருந்த காலமது! சிவ திருத்தலங்கள் கூட சமண பள்ளிகளாக மாறிப்போய் இருந்தன. இதனால் திருவாரூர் கோயில் குளம் தூர்ந்துபோய்க் கிடந்தது. இதை மற்றவர்கள் வாயிலாக அறிந்த தண்டியடிகள் குளத்தின் நடுவிலும் கரையிலும் கோல்களை நட்டு அவற்றினை ஒரு கயிற்றால் இணைத்தார். பார்வையில்லாது போனாலும் தானே குளத்தை வெட்டி அக்கயிறினை தன் இடையால் வருடியபடியே கரையில் சென்று தான் வெட்டிய மண்ணைக் கொட்டிப் பணி செய்தார்! குளம் நிறைந்தால் தான் நிலத்தடி நீர் மாசு படாது நன்னீராய் பெருகும் என்று, தன் ஞானக்கண்ணால் உணர்ந்து, செய்த அந்த மக்கள் பணியே மகேசன் பணியானது! அதனால் சமணர்களை எதிர்த்து இறைவன் அருளால் பார்வையும் பெற்றார். தம் பார்வையிழந்த சமணரோ அவ்வூரைவிட்டு அகன்றும் போயினர்!

கண்ணிருந்தும் நாம் செய்யத்துணியாத பணியை கண்களில் ஒளியிழந்தும் தண்டியடிகள் செய்த மாண்பு அவரை நாம் எல்லோரும் வணங்கும் நிலைக்கு உயர்த்தியது. திருவைந்தெழுத்தை ஓதியே திருக்குளப்பணி செய்த தண்டியடிகள் தான் எம் எல்லோருக்கும் வழிகாட்டி, இறைவனை வணங்குவது மட்டுமல்ல, இயற்கை தரும் மழை நீரை உரியவாறு மேலாண்மை செய்து சேமிப்பதும் சிறந்த வழிபாடு என்றே உணர்த்தி, முத்தியின்பம் பெற்ற தண்டியடிகளின் வாழ்வு எமக்கு பெரும்பாடம்! குளங்களை விழுங்கிக் குடியிருப்புக்களை இன்று நாம் அமைக்கிறோம். ஆனால் குடியிருப்புக்களை அகற்றிக்கூட குளங்களை அமைத்தனர் என்று வரலாறு சொல்கிறது.

நெகிழிப் பாவனையாலும் முறையற்ற கழிவகற்றலாலும் நீரோடும் பாதைகளை அடைத்து, குளங்களின் மகத்துவத்தை அறியாமல் அவற்றை அழித்து குடியிருப்புக்களை அமைத்து, விளைநிலங்களை எல்லாம் விலை நிலங்களாக்கி விற்று ஏப்பமிட்ட எம்மை இன்று இயற்கை தண்டிப்பதாகவே ஏற்றுக்கொள்வோம். இனியேனும் திருத்தொண்டின் வழியிலாவது இயற்கை சத்தியாகிய இறைசத்தியை எமக்கு இயையும் சத்தியாக மாற்ற இளையவர்கள் ஒன்றிணைவோம்.

"மண் வாழத் தன்னை வருத்தி தொண்டு செய்த,
தொண்டியடிகள் திருத்தாள் போற்றி"

திருச்சிற்றம்பலம்

# சிவத்திரு உமையொருசிவம் வள்ளிகாந்தன் நிகரிலரசு ஐயாவிற்கு செந்தமிழில் ஆசிரியத் திருமுழுக்கு



விட்ணுராசா வள்ளிகாந்தனின் தவப்புதல்வன் சிவத்திரு உமையொருசிவம் நிகரிலரசு அவர்கள். சைவமும் தமிழும் சிறந்து மிளிரும் வட்டுக்கோட்டையில் அவதரித்த, சிவத்திரு. விநாயகர் சின்னட்டி, "பத்தராய் பணிவார்கள் அடியார்க்கும் அடியேன்" என்ற வாக்கிற்கிணங்க தினமும் அறுபத்துமூவர் (நாயன்மார்) வழிபாடு ஆற்றி வந்தார். இவர் வழிவந்த வேலுப்பிள்ளை முத்தையா வேல்வழிபாடு ஆற்றியதுடன் செல்வச்சந்நிதி சென்ற போது, அடியவர் துயர் கண்டு, மனம் கலங்கி, மடாலயம் அமைக்க எண்ணி வேலுமுத்தையா என்னும் பெயரில், 1932ஆம் வருடம் ஐப்பசித் திங்கள் மடாலயம் அமைத்தார்.

அவர் சிவபதம் அடைய இவரது சகோதரராலும் (சின்னையாசாமி), பின் மகன் முத்தையா விட்ணுராசாவாலும் மடாலயம் சிறப்புற பராமரிக்கப்பட்டு, அடியவர்கள் வந்து தங்குவதுடன் "யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி" என்ற கூற்றிற்கு அமைய மகேசுவர பூசையும் சிறப்பாக நடைபெற்று, வரும் வேளையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் மடம் சிதைவடைந்த நிலையில், மீண்டும் விட்ணுராசாவினாலும், நல்லை குருமுதல்வராலும் அடிக்கல் நாட்டப்பட்டு மடாலயமானது அதேபாணியில் கட்டிடம் நிறைவேற்றப்பட்ட வேளையில் விட்ணுராசா சிவபதம் அடைய, இடையூறுகள் காரணமாக இத்திருப்பணி தொடர்ந்து செயற்படமுடியாத நிலையில் உள்ளது வருந்ததக்கது. சிவத்திரு. உமையொருசிவம் நிகரிலரசு ஐயாவுக்கு சிறுவயதிலேயே சைவத்தில் ஈர்ப்பை உருவாக்கியது, அவரது தந்தைவழி என்பது இதிலிருந்து புலப்படுகிறது.

இந்நிலையில் விட்ணுராசாவின் மகனான வள்ளிகாந்தன் அவர்களால் 1969ஆம் வருடம் முதல் வவுனியா மாநகரில் குடி கொண்டு, எழுந்தருளியிருக்கும் கருமாரி அம்மன் என்று அழைக்கப்படும், அருள்மிகு பத்தினி அம்மன் திருக்கோயிலின் தொடக்கத்திற்கு வித்திட்டவராகவும், கோயில் பூசகராகவும் திருத்தொண்டினை செய்து வந்தார். 1985ஆம் வருடம் அவ்வூர் மக்களின் உதவியுடனும், விட்ணுராசா வள்ளிகாந்தனின் முயற்சியாலும் திருக்கோயில் அமைக்கப்பட்டு, திருக்குடமுழுக்கு நடாத்தப்பட்டது. (வவுனியா மாநகரின் முதல் இராசகோபுரமும் திருத்தேரும் அமையப் பெற்ற முதல் திருக்கோயில் இதுவாகும்.) தற்போது இக்கோயிலில் மூன்று காலப்பூசைகளும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது சிறப்பம்சமாகும். இதிலிருந்து, நிகரிலரசு ஐயா, தெய்வத்தமிழ் பாதையில் தொடர்வதற்கு, பெரிதும் உறுதுணையாக, அவருடைய தந்தை இருந்திருப்பர் என்பதை பறைசாற்றிப் போகலாம்.

இவ் வழித்தோன்றல்களில் வாரிசான சிவத்திரு. உமையொருசிவம் நிகரிலரசு இலங்கைத் திருநாட்டின் சீர்மிகு வட்டுக்கோட்டையில், சிவத்திரு. வள்ளிகாந்தன் கமலவேணி தம்பதிகளின் தவபுதல்வனாக ரிசபன் என்ற இயற்பெயருடன் பிறந்தார். கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் கல்விகற்று, குஞ்சரா நிமலன் அம்மையார் ஆசிரியராகவும் வழிகாட்டியாகவும் வழிகாட்ட கொட்டாஞ்சேனை விநாயகர் கோயிலில் அறநெறிப் பாடசாலையில் சைவசமய ஒழுக்க விழுமியங்களை கற்று, நுழைவு தீக்கையினைப் பெற்று, சிறந்த முறையில் மனனம் செய்பவராகவும், பல போட்டிகளிற்கு சென்று பரிசில்களும் பெற்றும் வந்தார்.

வருடந்தோறும் நடக்கும் சிவனிரவு விழாவில் பல கதாபாத்திரங்களை (சேக்கிழார், கண்ணப்பநாயனார், சண்டிகேசுவரர்) ஏற்று நடித்தும் வந்தார். சிறு வயது முதல் வீட்டில் உள்ள விநாயகர் திருமுன்னுக்கு திருமஞ்சனம் ஆற்றி பாடல்களும் பாடி வணங்கி வந்தார். குலதெய்வமான ஆறுமுகச்சிவனையும் வணங்கி வந்தார். 2010 ஆம் வருடம் மேற்படிப்பை இலண்டனில் கற்று, உறவுமுறைப் பெண்ணான தனுஜா எனும் நல்லாளை, 2016 ஆம் வருடம் வைகாசி திங்கள் நன்னாளிலே இல்லாள் ஆக்கி, இரு குழந்தைகளின் தந்தையாகவும் உள்ளார்.

2018 ஆம் வருடம் ஈழத்திருநாட்டிற்கு திரும்பியிருந்த வேளையில், அருள்மிகு தென்னாடு ஐம்பூத நாதரின் அருளினால் தென்னாட்டின் நிறுவுனரான சிவத்திரு. திருவம்பலம் தென்னவனின் தொடர்பு கிடைக்கப் பெற்று, சைவத்தின் மீதும், தமிழின் மீதும் கொண்ட பத்தியால், ஐயா சத்தியவேல் முருகனாரை மனதில் குருவாககொண்டு, அவர்களின் ஆகம புத்தகங்களை ஆதாரமாகக் கொண்டு, செந்தமிழ் ஆகமத்தினைக் கற்று, யாழ்ப்பாணம் தென்னாடு மடத்தினால் செந்தமிழ் ஆகமமுறையில், சிவத்திரு. பிரகதி குருக்களால் நோன்மை தீக்கையும், சிவத்திரு. உருத்திரபுரிசுவரர் குருக்களால் ஐப்பசித் திங்கள் இருபத்தெட்டாம் நாள் (2021-11-14) அன்று ஆசிரியத் திருமுழுக்கு செய்யப்பட்டு குருப்பட்டமும் கொடுக்கப்பெற்றார். அதேவேளை தமிழ்நாட்டின் மறைமலை அடிகளாரின் வழிவந்த அருட்குருநாதர் சிவத்திரு. அருட்குருநாதன் ஒளியரசு ஐயாவினால் 'நிகரிலரசு' என்னும் திருப்பெயர் சூட்டப்பெற்றார். அன்று முதல் சிவத்திரு உமையொருசிவம் நிகரிலரசு (அரசு ஐயா) என அழைக்கப்பட்டார்.

தென்னாடு மடத்தினால் ஒழுங்கமைக்கபட்ட சிவத்திரு. லக்சன் மௌலி தம்பதியினரின் மங்கள நாண் பூட்டும் விழா மற்றும் பல திருகுடமுழுக்கு விழாக்களும் இவரினால் சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பல நுழைவு தீக்கைகளும் (சமய தீக்கை) இவரினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவர், வருகின்ற மார்கழி முடிவுப் பகுதியில் இலண்டன் மாநகரம் திரும்ப உள்ள நிலையில், அங்கு சென்று, புலம்பெயர் சூழலில் சைவசமயம் எதிர்கொள்கின்ற சவால்களை நிறைவாக்கும் முகமாக, பல சைவத்தமிழர்களுக்கு, குறிப்பாக சிறுவர்கள் மற்றும் இளையோர்களுக்கு செந்தமிழ் தீக்கை வழங்கல், வாழ்வியல் சடங்குகளை செந்தமிழில் ஆற்றல், திருக்குடமுழுக்குகளைச் செய்தல் போன்ற கைங்கரியங்களினுடாக சைவத்தையும் தமிழையும் தழைக்கச் செய்ய அரும்பணியாற்றுவார் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இவரின் திருப்பணி மென்மேலும், பார் எங்கும் தொடர, யாழ். கொக்குவில் பதியினில் வீற்றிருக்கின்ற மனோன்மணியம்மை உடனுறை ஐம்பூதநாதப் பெருமான் திருவருள் கிடைக்கட்டும்.

"சிவசிவ என்றிட சிவகதி தானே"

திருச்சிற்றம்பலம்

# இறையெய்திய, பன்முக ஆற்றல் மிக்க பண்பாளர், கலாபூசணம், புலவர்மணி சிவத்திரு. சுப்பிரமணியம் செல்லத்துரை

## (28-03-1937 - 21-10-2021)

இவரைச் சில வாரங்களின் முன்னர் சந்தித்தேன். அவரது உரையாடலின் இடையே உடலோம்பும், நம்முயற்சி பற்றிப் பேசினார். வைத்தியசாலைக்குப் போக வேண்டியும் உள்ளதென்றார். அவ்வாறு கூறியவர் வைத்தியசாலையிலே தன் கடைசிநாள்கள் கழியுமென எண்ணியிருக்க மாட்டார். வையக வாழ்வு அங்கேயே ஒடுங்கிவிட்டது. ஆற்றல்லெல்லாம் அடங்கிய அந்த பெரும்பிரிவுத் துயர்ச்செய்தி எம்மையெல்லாம் கலங்கும்படியாக்கிவிட்டது. கவலையுடன் விரைந்தேன் இளவாலைக்கு, இவரது அன்பர்கள், உறவினர், ஊரவர் எனப்பலரும் கூடிக்கலங்கி நிற்பதையும் கண்டேன், ஏழாலையிலும் இப்படி ஒரு கூட்டமிருக்கும் என்பதும் என் மானசீகவுணர்வு. அந்த உண்மையைப் பின்னர் கண்டேன். அவ்வேளையில்,

**"புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு**
**இரந்துகோள் தக்க துடைத்து"**

என நினைவு பேசியது, நீர்வார் கண்களையுடையவரான மக்கள் இவர் சேவையை நினைத்து நின்றனர். சூழ்ந்து நின்றவர்களது அமைதியான வாடிய முகங்கள் என் கண்களையும் பனிக்கசெய்தன. எம் வளவாளர் நம்மை விட்டுப்பிரிந்தமையால், என்னுணர்வும் இவ்வெற்றிடத்தை யார்தான் நிரப்பவல்லார்? என மேலெழுந்து நின்றது.


நடமாடிய பல்கலை வித்தகர், புலவருக்குப் புலவராய் மணியெனத் திகழ்ந்தவர். நம்மோடெல்லாம் இணைந்து பணிசெய்தவர். பணியினால் சமூகத்தோடு இணைந்தவர். சங்க உறுப்பினராக இருந்து ஆலொசனைகளை வழங்கி செயலாக்க உதவியவர்.

மாணவர்களை ஆற்றுப்படுத்தும் வகையில் சமய, இலக்கிய பாடங்களைப், பனுவல்களை, நாற்பாக்களை சுவைபெறப் புகட்டிப் பாடவைத்தவர். பேச்சு, கவிதை, நாடகம், வில்லிசை முதலிய பல்வேறு ஆளுமைகளும் கொண்ட, இவரது அறிவும் பண்பும் உயர்வுகளும் முன்பு பழகிய பழக்கத்தைக்காட்டிலும் மேலும் மேலும் பழகும் ஈர்ப்பை எனக்குத்தர, அது பெரியார் துணைக்கோடலாயிற்று அதனால், பேறு பெற்றேன். பழகப்பழக இனிப்பதே நல்லுறவு் பழகப் பழகப் புளிக்கும் என்பது இவர் போன்ற பெரியாருக்கு பொருந்தாது, நல்லுறவுக்கு இவர் எடுத்துக்காட்டும், இலக்கணமும் ஆகும்

இவர் என்னைவிடப் பத்து வயது மூப்புடையவராயினும் மறதி ஏதுமில்லா ஞாபகம் உடையவர். அதனால்லெல்லாம் என்னோடு நட்புரிமையுடைய பாராட்டுக்குரிய தோழர் ஆனார். அவரது அனுபவ ஞானம், அறிவு யாவும் எனக்குதவும்



பாங்கை நான் உணர, அவருடைய நட்பு உதவியதென்பது ஒருதலை. என்னைத் தன் உறவுக்குள் ஈர்த்தார் வீட்டுக்கருமங்களிலும் பங்கு பெறவைத்தார். எவரையும் அழைக்காத நிகழ்ச்சியினுங் கூட என்னை அழைத்து மகிழ்வார்- சுகம், துக்கம் எதுவானாலும் மனம் விட்டுப் பேசுவார். அந்தரங்கம் காக்கும் தன்மையன அவையென்று கூடப்பார்ப்பதில்லை நம்பிக்கையின் விளைவது. மூன்றாம்



தரமான வீண்பேச்சுக்கள் எம்சந்திப்பில் நிகழ்வதில்லை, நல்லம்சங்களே மேலோங்கும்.

**"தேடிச் சோறு நிதம் தின்று, வெகு**
**சின்னஞ்சிறுகதைகள் பேசி, மனம்**
**வாடித் துன்பமிக உழன்று, பிறர்**
**வாடப் பலசெயல்கள் செய்து..?"**

என்று வரும் பாரதியாரின் கூற்றுக்கு அமைவாக, நல்லவை இலக்கிய இன்பம் நல்கும் பேச்சுக் கலக்கும் பிரிய மனமில்லாமல் விடையேறுவோம், உவப்பத்தலைக் கூடும் உந்தப் புலவர் தன்மையே அதனால் பின்னரும் காணவிழைவோம். அதன் விளைவாலே தனித்து வரமுடியாத வேளைகளில் மகன் மாவிரதனுடன் வருவார். மகனது அவசரம் கருதிட நினைத்து நாம் தனித்திட சந்திப்பதே நலம் என்பர், உளமளி காதலது.

ஒரு முறை எனக்கேற்பட்ட விபத்தில் எனது வலதுகால் முறிந்து விட்டதை அறிந்து வீடுவந்து இவர் காட்டிய பரிகையை எவ்வாறு விளக்குவது, பேரன்புள்ள இவரைச் சந்திப்பதில் அலாதியான விருப்பம் கொண்டதன் பயனாக இவர்வாசம் செய்த இளவாலை, கொழும்பு, ஏழாலை, என்றெல்லாவிடத்தும் நாடிச்செல்வேன். பிரிவு, மகிழ்ச்சியனைத்தையும் சாகடித்து விட்டதே! சந்திக்கும் போது உறவாடி மகிழ்வோம். நான் வேறு அன்பர்களுடன் சென்றாலும் உபசரிப்பில் மாற்றமிருக்காது

"ஒருநாள் செல்லலாம், இருநாள் செல்லலாம், பலநாள் சென்று, பலரோடு பழகினும், தலை நாள் போன்ற விருப்பினன் மாதோ?" என்பதற்கொப்பானவர் அந்த உபசரிப்பு நேரங்களில் அன்னை சிவகாம சுந்தரியின் துணை, பந்தாவுக்கேற்ற பதிவிரதைத் தன்மை சொல்லி மாளாது.

மனை மறத்தில் மனைவிளக்காம் இல்லத்தரசி இல்லாதபோது விருந்தேது? "விருந்து புறந்தாத் தானுண்டல் சாவாம்…" என்கிறது வள்ளுவ நெறி, "அருந்தும் மெல்லடகாரிட் வருந்துமென்றழுங்கும் விருந்துமென்றழுங்கும் விருந்து கண்டபோ தொன்னுறையே வென்று விம்மும்" என்று பேசும் கம்பன்கவி, "தொல்வோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" என்று பேசும் சிலம்பு, இதனாலெல்லாம் விருந்தே தலையாயது என்பதும், இல்லத்தரசியின் மாண்பும் ஒன்று சேர்ந்தமையையும் உணரலாம். "அன்பெலாம் அமைந்த சுந்தரியின்றித் துரையவர்கள் வாழ்ந்தார் உரிமையை முன்போக்கிய சீலகன் போருக்கு புறப்பட்டான்" என்று பேசும் சீவகசிந்தாமணி. இவர் வாழ்வும் போர்க்களமானபோது, மாறா அன்பினரெல்லாம் உதவினர் ஏழாலைச் சம்பந்தியார் குலசிங்கம் குடும்பத்தினர் துணையானார்கள்.

இவரை நாடிவருவோரை தம்மிடம் வருவது போல நினைத்து உபசாரம் செய்து விருந்திட்டனர். தமிழறம் காத்தனர். இவ்வாறெல்லாம் இவரையும் இவரை சார்ந்தரையும் இனாது காணலாம்.

**"சார்பினுக் கெல்லாம் தகத்தகவாகித்**
**தன்தன்மையும் வண்மையும் மாறா"**

இங்கிதம் இவருக்கு வாய்த்தமை காணலாம். இவ்வாறு வாழ்ந்து சமுகசேவையால் இன்பாங் கண்ட, புலவர் மணியின் அருமையும் இன்மைமேல் நின்றவை உலகமே அறியும்
சுருங்கச் சொன்னால்

**"பாட்டும் பனுவலும் சேர்த்திடு வாரே**
**பேச்சுடன் நாடகக் கடத்துமிடு வாரே**
**காட்டும் வையகப் பொருள்களின் மேன்மை**
**கண்டு சாத்திரம் சொல்லிடுவாரே**
**நாட்டிலே அறம் கூட்டிவைப் பாரே**
**நாடும் இன்பங்கள் நயக்ச் செய்வாரே**
**தேட்ட மின்றி விழியெதிர் காணவே**
**தெய்வமாக விளங்குவர் இனிதே"**

என்று என்னுள்ளம் நயத்தல் புகழுரையல்ல, ஆக யாவரும் நயப்பீர் நலமே, நம்புலவர் வாழ்க்கை எவருக்கும் எடுத்துக்காட்டாகும்.

**"தோன்றி யழிவது வாழ்க்கைஇ இதனுள்**
**துன்பத்தோ டின்பம் வெறுமை யென்னும்**
**மூன்றில் எதுவரு மேனும்இ மகிழ்வில்**
**மூழ்கி நடத்தல் பரசிவ முத்தி**
**சிவமுத்தி இவரது சித்தி யென்போம்**
**தெய்வமாய் வாழ்வதே சக்தி யென்போம்**
**தவவாழ்வு வாழ்ந்தோர் தூசும் நிலையாம்**
**தளர்வினும் அமைதி காண்பது அறிவாம்."**

பேராசான், நாடு நலம் பெற நன்குழைத்த நல்லோன், சைவப்புலவர் சு.செல்லத்துரை ஐயாவிற்கு அன்பனின் உள்ளச் செய்தி!

**தண்டமிழ் சைவம் தேர் சால்புறும் அறிஞன்**
**வண்டியில் சோலை வளமண் மருவும்**
**இளவாலை யூரில் உதித்தினி தாக**
**வளம் பல விளைத்து வந்த ஆசான் - அவர்தாம்**

**எண்டிசை யெங்கும் ஏற்றம் பெருக்கும்**
**தொண்டினிற் துய்த்த தோழன் தானே**
**பயின்ற கேள்விப் பண்புடை நல்லோன்**
**பயனறு நூல்கள் பேசும் பொருளாற்**
**தூய்மை ஞானம் துணிந்த சிவச்சுடர் - அவர்தாம்**

**வாய்மை காத்து வந்ததன் பயனால்**
**பொய்யை யில்லாப் பொற்புறுக் நாய்கள்**
**புலமைப் பேறாய்ப் படைத்தனன் அவைதாம்**
**உலகில் உலா வரும் உந்தம் ஆகும். - அவர்தாம்**

**திருவமர் செல்ல துரை யவரை வணங்குவம்**
**அவரருடைய இன்மைமேல் ஆனதன் செயலால்**
**தவப்பே நுலகுய்யும் துணையென ஒழுகி**
**எந்நாளு மலர்வழி ஓர்ந்து**
**இந்நாளுலகில் இயற்றுவம் பணியே…**

**திருச்சிற்றம்பலம்**

**பண்டிதர்.ம.ந.கடம்பேசுவரன்**
**கலைமானி,**
**முதுகலைமானி தமிழ் (சிறப்பு)**

# தீக்கை – சீர்மிகு செந்தமிழ்ச் சைவர்களின் அடையாளம்

சீர்மிகு செந்தமிழ்ச் சைவர்களின் வாழ்க்கைச் சுற்றில் இளைய பருவத்தில் நிகழ்த்தப் பெற வேண்டிய வாழ்வியல் சடங்குகளில் தீக்கைப் பெறுதல் மிகவும் முக்கியமானதாகும். தீக்கையானது சைவச் சிறுவர், சிறுமியர்களுக்கு நான்கு அகவையில் இருந்து ஏழு அகவைக்கு உள்ளாக வழங்குதல் சாலவும் சிறந்தது.

**"தீ"** என்பது தீய்த்தலையும் **"கை"** என்பது செலுத்துதலையும் குறிக்கும். எனவே தீக்கை பெறுதல் என்பது தீக்கை பெறுபவரின் அறியாமையைத் தீக்குள் இட்டுத் தீய்த்து, இறைவனின் திருவருளைப் பெறும் திருநெறிக்குள் தீக்கைப் பெறுபவரைச் செலுத்துதல் என்று பொருள்படும்.

பொதுவாகத் திருக்கோயில்களிலோ அல்லது திருமடங் களிலோ தீக்கைக் கொடுப்பர். தமிழ்ச் சைவக் குழந்தைகள் சிவதீக்கைப் பெற்ற சைவ ஆசான்களிடமோ அல்லது சைவத் திருமடங்களின் தலைவர்களிடமோ தீக்கைப் பெறல் வேண்டும்.

தமிழ்ச் சைவநெறியைச் சார்ந்தவர்கள், தமிழ் மந்திரங்களான திருமுறைகளை ஓதி, **"நமசிவய"** என்ற திருவைந்து எழுத்து மந்திரத்தைச் சிவநெறி ஆசானிடம் இருந்து கேட்டும் சொல்லியும் தீக்கை பெறல் வேண்டும் என்பதனைப் பெரிய புராணத்தில் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

தீக்கையின் படிமுறைகள்

தமிழ்ச் சைவர்கள் தங்கள் வாழ்க்கையில் படிம முறையில் சமய தீக்கை அல்லது நுழைவுத் தீக்கை, சிவதீக்கை அல்லது நோன்மை தீக்கை (சிறப்புத் தீக்கைஃவிசேட தீக்கை), அறிவு தீக்கை (நிர்வாண தீக்கை), ஆசிரியத் திருமுழுக்கு அல்லது



தென்னாடு ஐம்பூதநாதர்

ஆசிரியத் திருமஞ்சனத் தீக்கை (ஆச்சாரிய அபிடேகம்) என்ற தீக்கைகளைப் பெறல் வேண்டும். சிறு அகவையில் சிறார்களுக்கு உரிய முதல் நிலைத் தீக்கையான சமய தீக்கை அல்லது நுழைவுத் தீக்கை பெறுதல் வேண்டும்.

தீக்கை அளிக்கும் முறையும் பல்வேறாகத் தீக்கை பெறுகின்றவரின் அறிவு மற்றும் முதிர்ச்சிக்கு ஏற்றவாறு அளிக்கப் பெறுகின்றது. அவ்வகையில் சைவ சமய ஆசான் தீக்கைப் பெறுபவரை அருட்கண் பார்வையால் நோக்கித் தீக்கை அளித்தல், தீக்கை பெறுபவரை அன்போடு தொடுதலால் தீக்கை அளித்தல், மந்திரங்களையோ திருமுறைப் பாடல் வரிகளையோ, சித்தாந்த சைவ மெய்கண்ட நூல்களின் பாடல்களையோ சொல்லித் தீக்கை அளித்தல், மனத்திற்கு மனமாய் தீக்கை அளித்தல், அறிவுக்கு அறிவாய் தீக்கை அளித்தல், சிவவேள்வி வழி தீக்கை அளித்தல் என்ற முறைகளில் தீக்கை அளிப்பர். இன்றைய சூழலில் சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் பொதுவாகச் சிவவேள்வித் தீக்கையே நிகழ்த்தப் பெற்று வருகிறது.

தீக்கையின் மூலம், இறைவனை நினைப்பிக்கும் திருநீற்றினை நாளும் தவறாமல் அணிந்து, திருமுறைகளையும் அஞ்செழுத்தையும் ஓதிய பின்பே உணவு உட்கொள்வேன் என்ற உறுதிப்பாடும் இக்கரணத்தின் வழி வலியுறுத்தப்படுகின்றது. அன்பு நெறியான சிவநெறியினைத் தலைமேற் கொண்டு பிற உயிர்களிடத்து அன்பும் மற்ற உயிர்களைத் தன் உயிர் போல் மதித்தலையும் பின்பற்றிச் சைவசமய நெறிக்குப் புறம்பானச் செயல்களை, மனம், வாக்கு, காயத்தினால் ஒரு போதும் செய்ய மாட்டேன் என்று உறுதி கொள்ளுதலும் இதன்வழி அறிவுறுத்தப்படுகின்றது. நம் குழந்தைகளை அன்பும் பண்பும் அறிவும் அருளும் பணிவும் நல்லொழுக்கமும் உடையவர்களாகச் செதுக்குவதற்கு வாயிலாய் அமையும் இத்தீக்கைக் கரணத்தின் முதன்மையைத் தமிழ்ச் சைவப் பெற்றோர்கள் உணர வேண்டும்.

**மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

# தென்னாடு செந்தமிழ் ஆகம தெய்வத்தமிழ்த் தீக்கைகள்









தென்னாடு ஆசிரியத் திருமுழுக்கு (ஐப்பசி 28)



நோன்மைத் தீக்கை (புரட்டாசி 31)







நுழைவுத் தீக்கை (ஐப்பசி 8)

# ஈழத்து சித்தர்கள்: சித்தர் சித்தானைக்குட்டி சுவாமிகள்

## (அற்புத சத்தியால் ஆகாயத்தில் தாவிச் சென்று, கடல் கடந்த கோவிந்தசாமி என்றழைக்கப்பட்ட சித்தானைக்குட்டி சுவாமிகள்)




**(பெரியானைக் குட்டி சுவாமிகள் சென்ற திங்கள்த் தொடர்ச்சி)**

இராமநாதபுரம் என்பது தென்னிந்தியாவிலே திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தஞ்சை மாவட்டங்களுக்கிடையில் அமைந்துள்ள மாவட்டத்தின் பெயர். இதிலுள்ள இராமேசுவரம், பேர் பெற்ற சிவத்தலம். இராமபிரான் சிவபூசை புரிந்த தலம். இராமநாதபுரத்தை ஆண்ட மன்னர்கள் சேதுபதி மன்னர்கள் என அழைக்கப்பட்டனர். சேது என்பது இராமபிரான் கடல்மேலிட்ட அணை. இங்குள்ள தீர்த்தம் சேது தீர்த்தம் என அழைக்கப்படுகிறது. இது கன்னியாகுமரி முதல் தொடங்குகிறதென்பதைக் "குரங்கு செய்கடற் குமரியம் பெருந்துறை" என மணிமேகலை கூறுகின்றது. இச்சேதுவைச் சார்ந்த நாடு சேதுநாடென வழங்கப் பெறுகிறது. இராமநாதபுர மாவட்டம் சேது நாடாகும். இராமபிரான் சேது கட்டிய காலத்தில் தம்மை வழிபட்ட நிஷாதத் தலைவன் ஒருவனைத் தாம் கட்டிய சேதுவைக் காத்துவரும்படி



ஆணையிட்டார் என்று சேதுபதிகளின் மரபைப் பற்றிக் கூறுவர். இவர்கள் பாண்டிய மன்னர்க்குப் படைத் தலைவர்களாகவும் இருந்தவர்கள்.

நல்லந்தையார், நன்முல்லையார், ஒக்கூர்மாசாத்தியார் போன்ற சங்கப் புலவர்கள் இப்பிரதேசத்திலே பிறந்தவர்கள். மாணிக்கவாசகர் இறைவனருள் பெற்ற திருப்பெருந்துறை இராமநாதபுரத்தைச் சேர்ந்ததாகும். நாட்டுக் கோட்டைச் செட்டியார்களுக்கு நிலையமான நாட்டரசன் கோட்டை என்பது சேதுமன்னரின் கோட்டை என்று பொருளாகும். தாயுமானவர் சமாதி அடைந்த முகவையும், மணவாளமா முனிவர் வளர்ந்த சிக்கற் கடாரமும் இம்மாவட்டத்தில் உள்ளவையாகும்.

**'பெருநாளி'** என்பது இராமநாதபுரத்துச் சிற்றரசர் ஒருவருடைய இராச்சியம். இந்த நாட்டுச் சிற்றரசருக்கு ஒரே ஒரு மகன். அவருடைய பெயர் கோவிந்தசாமி என்பதாகும். கோவிந்தசாமி அரச குடும்பத்திலே பிறந்து வாழ்ந்தும், அவருக்கு அரச போகங்களில் நாட்டம் ஏற்படவில்லை. உள்ளம் துறவை நாடியது. இந்தக் கோவிந்தசாமியே இலங்கையின் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காரைதீவில் சமாதி அடைந்த சித்தானைக்குட்டி சுவாமிகளாவார்.

### மூவர் சந்திப்பு

**'பெருநாளி'** இராச்சியத்தில் ஒருமுறை பெரியவொரு தொற்றுநோய் கண்டிருந்தது. இருந்திருந்தாற்போல் பலர் மாண்டனர். சில வீடுகளில் குடும்பத்தோடேயே மாண்டனர். இச்சந்தர்ப்பத்தில் இரு சாதுக்கள் தெருவீதிகளில் உலாவினர். அவ்வூர் மக்கள் அவர்களை இன்னார் என்று பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அவ்விருவரும் அவ்வூர் மக்களை நோயின் கோரப்பிடியினின்றும் மீட்க வந்த பேரருளாளர் ஆவார்கள். யாரும் போக அஞ்சும் கொடிய நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் வீடுகளுக்குச் சென்று தமக்கு உணவு தருமாறு வற்புறுத்தினர். தமது நோய் அவர்களுக்கும் தொற்றிவிடுமே என்ற கவலையினால் சிலர் மறுத்தனர். அவர்களை வற்புறுத்தி அவர்களிடமிருந்து ஏதாவது ஒரு உணவுப் பொருள் பெற்று, அவர்கள் முன்னிலையிலேயே இருவரும் உண்டனர். யார் உணவு அளித்தார்களோ அந்தக் குடும்பத்திலுள்ளார் எல்லாரும் நோயினின்றும் விடுதலை பெற்றனர். இச்செய்தி எங்கும் பரவியது. இவ்விரு சாதுக்களும் மக்களின் நோயைத் தாமே பெற்று அனுபவித்தனர்.

இச்செய்தியைப் **'பெருநாளி'** இராச்சியத்துச் சிற்றரசர் கேள்வியுற்றார். அவ்விரு சாதுக்களையும் தமது இராச்சியத்திற்கு அழைத்து உபசரிக்க எண்ணம் கொண்டார். சாதுக்களை அழைத்து வருமாறு தனது மகன் கோவிந்த சாமியை அனுப்பி வைத்தார் அரசர். கோவிந்தசாமிக்கு இப்படிப்பட்ட விடயங்களில் ஈடுபடுவதென்றால் தனி ஒரு மகிழ்வு. தந்தையாரின் கட்டளைப்படி சாதுக்களைத் தேடி கோவிந்தசாமி புறப்பட்டார்.

கோவிந்தசாமி அடியார்கள் இருவரையும் ஒரு குடிசையிலே சந்தித்தார். இருவரது பாதங்களையும் தமது உச்சிமேற் சூடினார். கோவிந்தசாமியைப் பார்த்ததும் இருவரது உள்ளங்களுமே நெகிழ்ந்தன. கோவிந்தசாமியை வாரி எடுத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர். அந்த இரு அடியார்களும் யார் என்பதை அறிய வாசகர்கள் ஆவலாயிருப்பார்கள் அல்லவா? அவர்களில் ஒருவர் கொழும்பு முகத்துவாரத்தில் சமாதி கொண்டிருக்கும் பெரியானைக்குட்டி சுவாமிகள். இந்தச் சுவாமிகளைப் பற்றிய கட்டுரை போன தென்னாடு பதிப்பில் வெளிவந்திருந்தது. அடுத்தவர் நாவலப்பிட்டி - குயீன்ஸ்பரித் தோட்டத்தில் சமாதி கொண்டிருக்கும் நவநாத சித்தர் ஆவார். நவநாதச் சித்தரின் வரலாறும் தென்னாடு முன்னைய பதிப்புகளில் வெளிவந்திருந்தது.

அடியார்களுக்கு அடியார் ஆனார் கோவிந்தசாமி

அரச உடையில் கோமகனாக இருந்த கோவிந்தசாமி அக்கணமே கோவணாண்டி ஆனார். இருவருக்கும் சீடர் ஆனார். வீடு திரும்பவே இல்லை. இருவரையும் பின்தொடர்ந்து நோயாளருக்கு வேண்டிய உதவிகள் செய்தார். **'ஒருவர் இருவரானார் இருவர் மூவராயினர்'** என்று சொல்லும் அளவுக்கு மூவரும் இணைபிரியாது இந்தியா எங்கும் யாத்திரை செய்தனர். காலம்தொடட்த் தொடர்பு போலும் மூவரும் யாத்திரையைப் பூர்த்தி செய்யும் நோக்கோடு ஈழ நாட்டுக்குப் புறப்பட்டனர்.

ஈழநாடு சாதுக்கள் பரம்பரை ஒன்று தோன்ற வேண்டும் என எதிர்பார்த்திருந்த காலம். பெரிய புராணமும், கந்தபுராணமும் கோயில் தோறும் படித்தும் கேட்டும் மக்களுடைய உள்ளம் சாதுக்களை எதிர்நோக்கியிருந்த காலம். சங்கம வழிபாட்டில் சிறந்து குருநாதனின் வருகையை எதிர்பார்த்திருந்த காலம். இத்தகையதொரு சூழ் நிலையிலேதான் இரு குருநாதர்களும் ஒரு சீடனும் சேர்ந்து மூன்று சாதுக்களாகி ஈழம் வர எண்ணங் கொண்டனர்.

இன்றைய காலத்திலும் ஈழத்திற்கு சாதுக்கள் தேவைப்படுகின்றனர். மக்கள் பெரியபுராணம் கந்தபுராணம் சிவ வழிபாடு எனத் தம்மைத் தயார் செய்தால் சாதுக்கள் ஈழத்தில் தோன்றுவார்கள்.

### கோவிந்தசாமி ஈழத்திற்கு வந்தது எப்படி?

இந்தக் காலத்தைப்போல் அந்தக் காலத்தில் போக்குவரவு வசதி இருக்கவில்லை. ஆனால் இந்தக்காலத்தைப் போல்கடவுச்சீட்டை, விசாக்கெடுபிடியும் அந்தக் காலத்தில் இல்லை. தூத்துக்குடியில் இருந்து மூவரும் கப்பல் ஏறிப் புறப்படத் தீர்மானித்தனர். கப்பலில் ரிக்கெற் பெற்றுக்



கொள்வதற்காக முன்கூட்டியே செட்டியார் ஒருவரை அனுப்பி வைத்தனர். இருவருக்கு மாத்திரமே ரிக்கெற் கிடைத்தது. அதனால் கோவிந்தசாமியை தமிழ் நாட்டுக் கரையிலேயே விட்டுக் கப்பல் கொழும்பை நோக்கிப் புறப்பட்டது.

கப்பல் கொழும்புத் துறைமுகத்தை அடைந்தது. கப்பலில் வந்தவர்களை வரவேற்கப் பெருந்தொகையான மக்கள் வந்திருந்தனர். அவர்களுக்குள்ளே கோவிந்தசாமியும் காணப்பட்டார். கோவிந்தசாமியைக் கண்ட குருநாதர் இருவரும் எவ்வித ஆச்சரியத்தையும் காட்டிக் கொள்ளவில்லை. கோவிந்தசாமியின் பக்குவ நிலையைப் பற்றி இருவரும் முன்னமே உணர்ந்திருந்தார்கள். 'மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது' என்று சொல்வார்களே, அதற்கு இலக்கியமாக விளங்கினார் கோவிந்தசாமி. கோவிந்தசாமி தங்களுடைய சீடன்தான் என்றாலும் அவரிடம் அற்புத சாதனைகள் மலிந்து கிடக்கின்றன என்பதும் அவர்கள் தெரிந்த விடயமே.

கப்பலில் இடம் இல்லாவிட்டாலும் ஆகாயத்தில் மனோவலிமையினால் தாவிச் செல்லும் அற்புத சத்தி அவரிடம் இருந்ததைக் குருநாதர்கள் இருவரும் நன்கு அறிந்திருந்தனர். எந்த இராமநாமத்தின் உதவி கொண்டு அனுமார் கடலைக் கடந்து இலங்கை வந்தாரோ, அந்த இராமர் கடலைக் கடப்பதற்கு அணைகட்டி வரவேண்டியிருந்தது. அதேபோன்று குருமார் இருவரும் கப்பலில் வர கோவிந்தசாமியாகிய சீடர் ஆகாயமார்க்கமாக இங்கு வந்து சேர்ந்து விட்டார்.

**(சித்தரின் சித்துக்கள் தொடரும்)**

திருச்சிற்றம்பலம்

**ஆக்கம் : ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்**
**தொகுப்பு - சிவத்திரு.வடிவேலு கங்காளன்**

# கார்த்திகை நிறைமதி கார்த்திகை விண்மீனில் வரும் கார்த்திகைத் தீபம் பழந்தமிழர் பண்பாட்டுத் திருவிழா



கார்த்திகைத் தீபம் அல்லது கார்த்திகை விளக்கீடு என்பது கார்த்திகை மாத நிறைமதியும், கார்த்திகை விண்மீனும் (நட்சத்திரமும்) சேர்ந்த திருக்கார்த்திகை நாளில் சைவத் தமிழர்கள் தமது இல்லங்களிலும் கோயில்களிலும் தீபங்களை ஏற்றி மகிழ்ச்சியாகக் கொண்டாடும் ஒரு தீபத் திருநாள் ஆகும். தமிழர்கள் எந்த விழாக் கொண்டாடாவிடினும் கண்டிப்பாகக் கொண்டாடவேண்டிய விழாக்களில் கார்த்திகைத் தீபம் முக்கியமானதொன்றாகும்.

கார்த்திகைத் தீபத் திருவிழா பழந்தமிழ் இலக்கியங்களில் பல்வேறு இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**“கார்த்திகை விளக்கீடு”** என்ற சொல்லை முதலில் தமிழிலக்கியத்தில் பயன்படுத்தியவர் சம்பந்தர். மயிலையில் பூம்பாவையை உயிர்ப்பித்த பதிகத்தைப் பாடும் போது, விளக்கீடு காணாமல் போதியோ பூம்பாவாய் என்று பாடுகின்றார் அவர். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான களவழி நாற்பது இதைக் **“கார்த்திகைச் சாறு”** (சாறு ஸ்ரீ விழா) என்று பாடியிருக்கிறது. திருவண்ணாமலை உச்சியில் கார்த்திகை விளக்கீடு கொண்டாடப்பட்டது பற்றி பற்றி சீவக சிந்தாமணி **“குன்றில் கார்த்திகை விளக்கீட்டென்ன”** என்று பாடுகிறது. இன்னும் தொல்காப்பியத்தில் வருகின்ற **“வேலி நோக்கிய விளக்கு நிலையும்”** (பொருளதிகாரம் புறத்திணையியல், 35) என்ற வரிகளுக்கு கார்த்திகை விளக்கு என்று விளக்கம் சொல்கிறார் நச்சினார்க்கினியர். இதெல்லாம் கார்த்திகை விளக்கீட்டின் பழைமையையும் புகழையும் விளக்கப் போதுமானவை.

**மழைகால் நீங்கிய மாக விசும்பில்**
**குறுமுயல் மறுநிறம் கிளர, மதி நிறைந்து,**
**அறுமீன் சேரும் அகல்இருள் நடுநாள்:**
**மறுகுவிளக் குறுத்து, மாலை தூக்கிப்,**
**பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய 141-10**

அகநானூற்றின் 141ஆம் பாடலில், கணவனைப் பிரிந்திருக்கும் தலைவி வானை நோக்குகிறாள். வானத்தில் மழையைக் காணவில்லை. முயல் என்று நாமெல்லாம் சொல்லும் களங்கம் நிலவில் பளிச்சிட்டுத் தெரிய, நிறைமதியில் கார்த்திகை நாண்மீன்கள் ஆறும் நெருங்குகிறது. எல்லோரும் விளக்கேற்றி வைத்து மாலை தூக்கி தோரணம் கட்டுகிறார்கள். என்னோடு இப்பொழுதைக் கொண்டாடவாவது அவர் வரவேண்டுமே” என்று பெருமூச்செறிகிறாள்.

**முத்தொள்ளாயிரம் என்னும் நூலில்,**
**குடத்து விளக்கேபோல் கொம்பன்னார் காமம்**
**புறப்படா பூந்தார் வழுதி - புறப்படின்**
**ஆபுகும் மாலை அணிமலையில் தீயே போல்**
**நாடறி கௌவை தரும்**

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சீவக சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர் **“குன்றிற் கார்த்திகை விளக்கீட்டென்ன”** என்றும் பொய்கையார், கார் நாற்பதில் **“கார்த்திகைச் சாற்றிற் கழி விளக்கைப் போன்றனவே”** என்றும் கார்த்திகை தீபத்தைப் போற்றுவர்.

கார்த்திகை மாதத்தில் நிறைமதிக்கு அடுத்த நாள், அல்லது அதற்கு முன் பின்னான நாள், கார்த்திகை நாண்மீனாக இருந்து வருகிறது. அதனால் தான் இந்த மாதம் கார்த்திகை என்று பெயர் பெறுகிறது. கார் என்றால் இருள் என்றும் பொருள் படும். அதாவது மழை கூடிய மாதமாகும். இந்தக் கார்த்திகைத் திங்களில் வரும் கார்த்திகையில் விளக்கேற்றி வழிபாடுகளை நிகழ்த்துகிறோம். வீட்டுச்சுவர், மதில், திண்ணை என்பவற்றில் அகல் (சுட்டி) விளக்கேற்றியும், வீட்டு வாசல்கள், ஆலய முன்றல்களில் சொக்கப்பனை (சொக்கர் பாவனை) எரித்தும், வீட்டு வளவு முழுவதும் தற்காலிக ஈர்க்கு விளக்குகளை நட்டும் ஒளிமயமாகக் கொண்டாடுகிறோம்.

மாலும் அயனும் தங்களுள் யார் பெரியவர் என்ற அகந்தையினால் எல்லாம்வல்ல பரம்பொருளின் அடி நுனியை தேடி கண்டுபிடிக்க முடியாமல் போனதை இதனை திருவாசகத்தில் மணிவாசகர் **“மாலறியா நான்முகனும் காணா மலையினை”** என்று விபரிக்கின்றார். இறுதியில் அவர்கள் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பதை உணர்ந்தனர். அதன் பின்னர் எல்லாம் வல்ல சிவபரம்பொருள் சோதி வடிவில் அவர்களுக்கு காட்சியளித்த நாளே கார்த்திகை நிறைமதி திதியுடன் கூடிய கார்த்திகை நாண்மீனாகும்.



இது சிவன் மற்றும் முருகன் கோயில்களில் நிறைமதித் திதி கார்த்திகை நாண்மீனிலும், திருமால் பத்தர்கள் சகடு நாண்மீன் (இரோகிணி) அன்றும் வீடுகள் மற்றும் இடங்களில் நிறைமதித் திதியிலும் கொண்டாடப்படும்.

### அண்ணாமலையாரின் கார்த்திகைத் தீபம்

இத்தினத்தன்று அதிகாலையில் அண்ணாமலையார் சன்னதியில் ஒரு தீபம் ஏற்றி, அதன் மூலம் மேலும் ஐந்து தீபங்கள் ஏற்றி பூசைசெய்வர். பின்பு அந்த தீபங்களை ஒன்றாக்கி அண்ணாமலையார் அருகில் வைத்து விடுவர். இதனை, ‘ஏகன் அநேகனாகி அநேகன் ஏகனாகுதல்’ தத்துவம் என்கிறார்கள். பரம்பொருளான சிவனே, பல வடிவங்களாக அருளுகிறார் என்பதே இந்நிகழ்ச்சியின் உட்கருத்தாகும்.

இதனையே சாத்திர நூலாகிய சிவஞான சித்தியார் பின்வருமாறு கூறுகிறது.

**யாதொரு தெய்வம் கண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே**
**மாதொரு பாகனார் தாம் வருவார்**

### பரணி தீபம்

திருவிழாவின் பத்தாம் நாளாகிய கார்த்திகை மாத நிறைமதி திதியில் அடுப்பு அல்லது பரணி நாண்மீன் அன்று அதிகாலை 4.00 மணிக்கு, மூலவர் கருவறைமுன் மிகப்பெரிய கற்பூரக் கட்டியில் சோதி ஒளி ஏற்றி, தீபாராதனை காட்டி, அதில் ஒற்றை தீபம் ஏற்றுவார்கள். இந்த ஒற்றை




நெய்த்தீபத்தால் நந்திமுன் வைக்கப்படும் ஐந்து பெரிய அகல் விளக்குகளை ஏற்றுவார்கள். அதன்பின் உண்ணாமுலை அம்மன் சந்நிதியிலும் ஐந்து பெரிய அகல் விளக்கில் தீபம் ஏற்றுவார்கள். இந்த பரணிதீபம் காலையில் நடக்கும். பரணி தீபம் ஏற்றப்பட்ட பிறகு, அதைக் கொண்டு ஐந்துமுக தீபம் ஏற்றப்படுகிறது. பரணி தீபத்தினை இறுதியாக பைரவர் சன்னதியில் வைக்கின்றனர்.

ஐந்து மடக்குகளும் (அகல் விளக்குகளும்) படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில் புரியும் இறைவனின் ஐந்து திருமுகங்களைக் குறிக்கும்.

### மகாதீபம்

மகா தீபம் கார்த்திகைத் தீப திருவிழா நாளின் மாலையில், அண்ணாமலை மலையின் மீது ஏற்றப்படுகிறது. இம்மலை 2,668 அடி உயரமானதாகும். மாலை நேரத்தில் ஐந்து மூர்த்திகள் தீப மண்டபத்தில் எழுந்தருளுகின்றனர். அவர்களைத் தொடர்ந்து வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே காட்சிதருகின்ற மாதொருபாகனார் உற்வசக் கோலத்தில் தீப மண்டபத்திற்கு எடுத்து வரப்படுவார். அவர் முன்பு அகண்ட தீபம் ஏற்றப்படுகிறது. இத்தீபம் ஏற்றப்படுகின்ற அதே நேரத்தில், மலையில் மகாதீபம் ஏற்றப்படுகிறது.

**அண்ணா மலையெம் அண்ணா போற்றி**
**கண்ணா ரமுதக் கடலே போற்றி - திருவாசகம்**

கார்த்திகை தீபத்தன்று மலைவலம்ஃகிரிவலம் வருதல் மிகவும் சிறப்பானது. அந்நாளில் வலம் வருதல் பாவவீடு நிச்சயம் பெற்றுத்தரும் மற்றும் ஊழ்வினைகளைப் போக்கும் என்பது நம்பிக்கை.

### சொக்கப்பனை ஃ சொக்கர் பாவனை

சொக்கப்பனை கொளுத்துதல் என்பது சிவன்கோயில் மற்றும் முருகன் கோயில்களில் கார்த்திகை தீபத் திருவிழாவின் பொழுது நடைபெறும் நிகழ்வாகும்.

பனைமரத்தினை வெட்டி அதன் மரம் அல்லது சிலாகையை கோயிலின் முன்முற்றத்தில் நட்டு, அதில் சில அடி உயரத்திற்குப் பனை ஓலைகளைக் கூம்பு போன்று அமைத்து, அதில் எண்ணெய் இட்டு எரிக்கப்படும். இது சொக்கப்பனை அல்லது சொக்கர் பாவனை என்று அறியப்படுகிறது.

கார்த்திகை தீபத்தன்று சிவன்கோயில் கோபுர உச்சியில் தீபம் ஏற்றி பின்னர் ஐந்து மூர்த்திகளுக்கு வழிபாடு நடத்தப்படுகிறது. அதன் பின் ஐந்து மூர்த்திகளையும் சொக்கப்பனை வைத்திருக்கும் இடத்திற்கு எடுத்து வந்து, மூர்த்திகளுக்குத் தீபாராதனை காட்டப்பெற்று, அந்தத் தீபச்சுடரால் சொக்கப்பனையைக் கொளுத்துகின்றார்கள்.

அனைத்து சைவத் தமிழர்களும் கண்டிப்பாக கொண்டாடவேண்டிய ஓர் பழந்தமிழ்ப் பண்பாட்டுத் திருவிழாவே கார்த்திகை நிறைமதியுடன் கூடிய கார்த்திகைத் தீபத்திருநாள் ஆகும்.

### ஐம்பூதநாதர் போற்றி

**பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி**
**நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி**
**தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி**
**வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி**
**வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி**
**அருக்கனில் சோதி அமைத்தாய் போற்றி**
**வெண்மதி தண்ணொளி தந்தாய் போற்றி**
**உயிருக்குள் உயிராய் நின்றாய் போற்றி**
**ஆதியும் அந்தமும் இல்லாய் போற்றி**
**ஓம் ஐம்பூதநாதரே போற்றி போற்றி**

**தென்னவன் பார்த்தீபன்**



# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரியபுராணம்:
# தண்டியடிகள் எனும் தவச்சீலர்



சிவத்திரு.
பா.சிவமாதவன்
புதுக்கோட்டை

**“திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்”** என்பது திருத்தொண்டத் தொகை. பெரியபுராணத்திற்கு மூலமாகிய திருத்தொண்டத்தொகை தோன்றியது திருவாரூரிலே ஆகும். திருமால் பூசித்த செல்வத் தியாகர் எழுந்தருளியிருக்கின்ற மிகப்புனிதமான புண்ணியத்திருத் தலம். இன்றும் பற்பல சிறப்புக் களை உடையது திருவாரூராகும். அப்பேற்பட்ட பதியிலே தோன்றி யவர் தான் அகத்தில் இறை வனைக் காணும் விருப்பில் புறப்பார்வை விரும்பாது பிறந்த புண்ணியர் தண்டியடிகளாவார்.

அதாவது இவர் பிறவியிலே கண் இழந்தவர். இப் பெரியவரைத் தெரிவிக்க வந்த நம்பியாரூரர், நமது கருத்தில் கண்ணில்லாதவர் என்ற அலட்சியம் சிறிதும் வரக்கூடாது என்று கருதி “நாட்டமிகு தண்டி” என்று மிகவும் அழகாகக் குறிப்பிடுகிறார்.

முகத்தில் கண்கள் இருந்தால் மட்டும் போதாது. அகத்தில் கண்கள் இருக்க வேண்டும்.வெறும் புறப்பார்வை மட்டும் பயன்படக்கூடாது என்பதை மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார்.

**“கையனேன் இன்னும் செத்திலன் அந்தோ
விழித்திருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன்”**
(23.செத்திலாப்பத்து)

அதாவது உன்னைக் கண்ணால் பார்த்த பின்பும், திடம்பெற பிடிக்கமுடியாமல் விட்டுவிட்டேன். அதற்குக் காரணம் உள்ளத்தில் உன்னை இருத்தாதே என குறிப்பிடுகிறார். அகக் கண் பெற்றாரே சில அற்புதக் காட்சிகளைக் காண்கிறார்கள்.

**“முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே யானந்தம்”**


என்று அழகாகத் திருமூலர் உபதேசிக்கிறார். தண்டியடிகளாரை தெய்வச் சேக்கிழார் பெருமான் அடையாளப்படுத்துவது, அடியார்கள் எப்படியிருந்தார்கள், எப்படி இருக்க வேண்டும் மென்பதை நமக்கு பறைசாற்றுகிறது. அப்பெரியபுராணப் பாடல்,

**“காணும் கண்ணால் காண்பது மெய்த்
தொண்டே ஆன கருத்து உடையார்
பேணும் செல்வத் திரு ஆரூர்ப்
பெருமான் அடிகள் திருவடிக்கே
பூணும் அன்பினால் பரவிப்
போற்றும் நிலைமை புரிந்த அமரர்
சேனும் அறிய அரிய திருத்தொண்டின்
செறியச் சிறந்து உள்ளார்”**




நாயன்மார் செய்த செயலை **“அரிய”** திருத்தொண்டு என்று சேக்கிழார் குறிப்பிடுகிறார். ஏனெனில் இறைவன் அரியதில் அரிய அரியவனாக இருக்கின்றான். எனவே அவனை நோக்கி செய்யும் தொண்டுகள் யாவுமே அரிய திருத்தொண்டாகவே கருதப்படும்

நாம் ஒரு சிறப்பான செயலை செய்யும் பொழுது அதனை இடையுறு செய்வதற்கென்றே வருபவர்கள் பலர். அதற்காக அதனை கைவிட்டு விட்டால் நமக்குத்தான் இழப்பு.



இடையூறு செய்பவர்கள் அடுத்த வேலையை செய்து கொண்டு இருப்பார்கள். எனவே நாம் எதனையும் கண்டு அஞ்சாமல் நம் வேலையை சிறப்பாக செய்து முடிக்க வேண்டும். இதற்கு சிறந்த சான்று நம்முடைய நாயன்மார் ஆவார். “செம்மைபுரி நாவால் இன்பம் உறும் காதல் நமச்சிவாய நல் பதமே” என்று நாயன்மார் வாழ்ந்து வந்தார் அயிராவணம் ஏறாதே ஆரூர் இனிது ஆண்ட பெருமானிடம் பேரன்பு கொண்டவராய் திகழ்தார். இன்று நாம் கண்டுகளிப்புறும் கமலாலய திருக்குளத்தை சுற்றி சமணப்பாழிகள் இருந்தன. திருக்குளத்தின் சிறப்பறியாத சிறியவர்களான சமணர்கள் பாழ்படுத்தினர். அதனைக்கண்டு பொறுக்காத அடியார் திருக்குளத்தை சீரமைக்க எண்ணினார்.



### திருகுளமெடுத்தல்

உயிர்களுக்கு இன்றியமையாதது தண்ணீர். **“நீரின்றி அமையாது உலகம்”** என்பர் திருவள்ளுவர். ஆடு மாடுகள் முதலிய விலங்குகளை தாகம் இன்றி வைப்பதற்கும், பறவைகள் நீர் பருகி மகிழவும், மனிதர்கள் நீராடி சிவ வழிபாடு செய்யவும், இன்னும் பல நற்கருமங்கள் புரியவும் துணையாக இருப்பது திருக்குளம். அதுவும் சிவசம்பந்தமுடைய தாயின் அளவிடற்கரிய பெருமையுடையது. அப்பேற்பட்ட செயலைத்தான் அரியதும் என்பார்கள்.

குளத்தின் மையப்பகுதியில் ஒரு தடியை நட்டு அதிலிருந்து கையிற்றை சேர்த்து குளக்கரையில் ஒரு தடியை நட்டு அதோடு இணைத்துக் கொண்டார். அந்த கயிற்றை பிடித்துக் கொண்டே மண்ணை எடுத்தார். அதனை கண்டு பொறுக்காத சமணர்கள் மண்ணை எடுத்தால் உயிர்கள் துன்புறும் என்று தடுக்க முற்பட்டனர். தண்டியடிகளார், இறைவனுக்கு செய்யும் பணி அறப்பணியாகும், அது உங்களுக்கு அறிய வருமோ? என்றார்.

அதற்கு சமணர்கள், உனக்கு பார்வையில் தான் குறையென்றால், செவியும் இழந்தாயோ? என்றனர்.இந்த இடத்தில் அடியாரைக் குறிப்பிடும் பெரியபுராணப்பாடல் மிகச்சிறப்புடையதாகும். அப்பாடல்,

**“அந்தமும் இல்லா அறிவும் உடையார்
உரைப்பக் கேட்டு அறிவு இல்லார்
சிந்தித்து இந்த அறம் கேளாய்
செவியும் இழந்தாயோ என்ன”**

இதில் அந்தமில்லா அறிவுடையார் என்பது சிறப்பானதொரு சொல்லாடலாகும். உயிர்கள் யாவுமே சிற்றறிவு உடையன. இறைவன் மட்டுமே பேரறிவு உடையவன். அந்தமில்லா அறிவுடையோனும். அதனை கடந்தவனும் அவனே. அப்படியிருக் ஏன் இந்த சொல் வந்ததெனில், அடியார்கள் உள்நின்று அனைத்தையும் செய்பவன் இறைவன். அதனால் தான் காழிப்பிள்ளையாரும் “எனதுரை தனதுரை” என்றார்.

எனவே தான் அடியாரை வைத்து அற்புதமான செய்தியை சேக்கிழார் உலகிற்கு எடுத்துரைக்கின்றார். அடியார் சமணரைப்பார்த்து **“எனக்கு பார்வைகிடைத்து உங்கள் கண்பார்வை குரடானால் என்ன செய்வீர்”** என்றார். அதற்கு சமணர்கள் உன் தெய்வத்து அருளால் அது நடக்குமாயின் ஊரைவிட்டு ஓடிவிடுகிறோம் என்று கூறி தறிகளையும் கயிறுகளையும் பறித்தனர். உடனே தண்டியடிகள் இறைவனிடம் சென்று வருந்தி முறையிட்டார்.

இறைவன் கனவில் தோன்றி **“நெஞ்சில் மருவும் கவலையினை ஒழி நீ! நின் கண் விழித்து அந்த வஞ்ச அமணர்தம் கண்கள் மறையுமாறு காண்கின்றாய் அஞ்ச வேண்டாம்”** என்றார். பிறகு அரசனின் களவில் தோன்றி அடியார் கருத்தை முடிப்பாய் எனக்கூறினார். அகில லோகங்களும் அளித்த முதல்வனார்

அடுத்தநாள் காலையில் மன்னன் ஓடோடி வந்து நடந்ததைக் கேட்டு தண்டியடிகளைப்பார்த்து **“பெருந்தவத்தீர்! அருளால் கண்பெறுமாறு காட்டுக”** என்றான். உடனே தண்டியடிகள் **“சிவனுக்கு அடிமை யாமெனில், என்கண்பெற்று வேந்தன் எதிரே சமணர் கண் இழப்பார் என்று அஞ்செழுத்தோதி திருக்குளத்தில் மூழ்கி எழுந்தார். அடியார் கண்வரப்பெற்றார். அமணர் கண் கெட்டார் அகத்திலிருந்த குருடு புறத்திலும் குருடாக்கியது. சமணர்கள் கண்ணிழந்த குருடர்களாக ஆரரை விட்டு நீங்கினார். அடியார் தொண்டு செய்துஆருர் ஆண்டவனின் அடிக்கமலம் சேர்ந்தார். இறைவனுக்கு செய்கின்ற பணி உயிர்களுக்கு நன்மை பயக்கும். அதனைத்தடுத்தால் துன்பமே கிடைக்கும் என்பதை மிகச் சிறப்பாக “தண்டியடிகளாரின்”** வரலாறு நமக்கு உணர்த்தும்.

திருச்சிற்றம்பலம்

# சிவபூமியில் சிவனைத் தேடி -

## 2000 வருடங்களுக்கு முற்பட்ட நாகரின் தொல்பொருட் சின்னங்களைத் தாங்கி நிற்கும் அம்பாறை காரைதீவுச் சிவன் கோயில்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு



### அம்பாறை

ஈழத்தின் வரலாற்றிலே பண்டைய காலம் தொட்டு தமிழர் வாழ்ந்து வந்த தனித்துவமான நிலப்பரப்பில் அம்பாறை மாவட்டமும் ஒன்றாகும். இம்மாவட்டத்தில் வீரமுனை, சம்மாந்துறை, காரைதீவு, திருக்கோயில், சங்கமன் கண்டி, உகந்தை ஆகிய இடங்கள் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்தவை. இவ்விடங்களில் அமைந்துள்ள பிள்ளையார், முருகன், சிவன், கண்ணகி கோயில்கள் மிகப் புராதனமானவை. இக்கோயில்கள் வரலாற்று ஏடுகள், பட்டயங்கள், சாசனங்கள், போன்ற தொல்லியல் சான்றாதாரங்கள் மூலமாக ஆதாரப் படுத்தப்பட்டவைகளாகும். வரலாற்று ஆய்வாளர்களின் கருத்துப்படி, ஈழத்தில் பழமைக் குடிகளாக வாழ்ந்த நாகர்களின் இருப்பிடத்திற்குரிய தேசமாகவும், சோழ மன்னர்களின், குறுமன்னர்களின் இராசதானியாகவும், இராமாணய காவியத்தோடு தொடர்புடைய மாவட்டமாகவும் அம்பாறை விளங்கியுள்ளதை தெரிந்து கொள்ள முடிகின்றது.

### திருத்தலவூரின் வரலாறு

பண்டைய காலந்தொட்டு வடக்கில் யாழ்ப்பாணத்திலும், வடமேற்கில் புத்தளத்திலும், கிழக்கில் அம்பாறையிலும் காரைதீவு எனும் ஊர் அமைந்துள்ளது. அவை தமிழர்களின் தாயகமாகவே திகழ்ந்துள்ளது. அம்பாறை மாவட்டத்தின் கல்முனை நகரில் இருந்து ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கிராமம் காரைதீவாகும். முத்தமிழ் வித்தகர் என்று பார் போற்றும் சுவாமி விபுலானந்தர் பிறந்த மண்ணும், சுவாமி சித்தானைக்குட்டிச் சித்தர் வாழ்ந்து சமாதியடைந்த புண்ணியப் பேறும் வாய்க்கப் பெற்ற சிறப்பும், இக் கிராமத்திற்கு உண்டு. மட்டக்களப்பு மான்மிய நூலில் 'காளிதேசம்' என்றும் காரைதீவை வழங்கி வந்த செய்தியும் உள்ளது. கண்ணகி வழக்குரை எனும் ஏட்டில் "பட்டிநகர் தம்பிலுவில், காரைநகர் வீரமுனை" என்ற பாடல் வரும் ஊர் சுற்றுக் காவியத்தில், காரைதீவு 'காரைநகர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு வாழ்ந்த முன்னோர், இவ்வூரில் சிறு நீர்த் தேக்கங்களும் அதனையொட்டி வளர்ந்த காரை மரங்கள் அதிகமாக இருந்தமையாலும், நீர் சூழ்ந்த இவ்வூர் தீவு போன்று இருந்தமையாலும் காரைதீவு என்று வழங்கப்பட்டு வந்தது என்று கூறுகின்றனர்.

"இலங்கைத் தமிழர் வரலாறு - கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும்" என்னும் நூலில் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள், காரைதீவில் சுமார் 2000 வருடங்களுக்கு முற்பட்ட காலத்து தமிழர் பண்பாட்டுச் சின்னங்கள், தற்போது பிரதான வீதியில் அமைந்துள்ள கிழக்கிலங்கையில் புகழ் பூத்த கண்ணகி அம்மன் கோயிலில் தரிசிக்கக் கிடைத்ததாகக் குறிப்பிடுகின்றார். பெரும்பாலும் இது வரை எங்கும் காணப்படாத மிகவும் அரிய புராதன சின்னங்கள் என்றும், அவை நாகரின் பண்பாட்டுச் சின்னங்கள் என்றும், அவை எல்லாவற்றிலும் தமிழ்ப்பெயர்களே பொறிக்கப்பட்டிருப்பதாகவும், அதுவும் 2000 வருடங்களுக்கு முற்பட்ட தமிழ்ப் பிராமி வரிவடிவங்கள் எழுதப்பட்டுள்ளன என்றும் குறிப்பிடுகின்றார்.



பண்டைய சிவன் கோயில் எச்சங்கள் காரைதீவு கண்ணகி அம்மன் கோயிலில் வைத்துப் பூசிக்கப்படுகின்றன

காரைதீவு கண்ணகி அம்மனின் கோயில்மரமான வேப்பமரத்தடியில் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்ட ஒரு செங்கல் காணப்படுகின்றது. இது 10 அங்குல உயரமும், 8 அங்குல அகலமும் கொண்டது. ஒரு வீரன் முகத்தைச் சரித்துக் கொண்டு, ஒரு கையில் வில்லையும், மறுகையில் அம்பையும் பிடித்து நின்றவாறு, இவ் நடுகல் சிற்பம் காணப்படுகின்றது. இன்றும் அதை இவ்வூர் மக்கள் பயபத்தியுடன் வழிபட்டும் வருகின்றனர்.

இவ் நடுகல், இவ்வூரில் தமிழர் சமுதாயம் பண்டைய காலம் தொட்டு நிலவி வந்திருப்பதற்கு முக்கிய ஆதாரம் என்று எவரும் முன்பு அறிந்திருக்க வாய்ப்பில்லை. அதற்குரிய ஆய்வுகளும் இவ்விடத்தில் நடைபெறவில்லை. இருப்பினும், இதை முதன் முதலில் 2014 இல் கண்டுபிடித்து 'தென் கிழக்கு இலங்கையின் பண்டைய இந்து சமய வரலாறு' என்ற நூலினுடாகக் குறிப்பிட்டவர், வரலாற்று ஆய்வாளர் என். கே. ஏஸ் திருச்செல்வம் ஆவார். இவரைத் தொடர்ந்து, இந்நடுகல் பற்றிய ஆய்வினைச் சரிவரச் செய்து 'இலங்கைத் தமிழர் வரலாறு' என்ற நூலில் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் கீழுள்ளவாறு குறிப்பிட்டுள்ளார்.

"இந்த வடிவம் பழந்தமிழகத்து நடுகற்கள், வீரக்கற்கள் என்பனவற்றை நினைவுறுத்துகின்றது. பழந்தமிழ் நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பனவற்றில் அவற்றைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. ஆயினும் அங்கு நடைபெற்ற அகழ்வாராய்வுகளில் காரைதீவிற் கிடைப்பதைப் போன்ற



காரைதீவு கண்ணகி அம்மன் கோயில்

போர்வீரனின் வடிவம் இதுவரை காணப்படவில்லை. தமிழகத்து முதுமைத் தொல்வியலாளர்களில் ஒருவரான கலாநிதி சு. இராசகோபால் காரைதீவிலுள்ள செங்கல்லிற் காணப்படும் வடிவம் போர்வீரன் ஒருவனின் வடிவம் என்ற கருத்துக்கு முத்திரையிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது"

எனவே காரைதீவில் கிடைத்துள்ள இச்சிற்பக்கல் மிகவும் புராதனமானதும் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியதும் ஆகும். மற்றும் கோயில் வளவின் தென்கிழக்கு மூலையில் கவனிப்பின்றி கிடக்கும் கல் ஒன்றிலே இருபக்கங்களும் யானைகள் நின்று கொண்டு, மணிநாகனை நீரால் நீராட்டும் காட்சி அழகான கோலத்தில் தெளிவான சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. அதன் அருகில் கிடக்கும் வட்டவடிமான, சதுரவடிவமான கற்களிலும் பெயர்ச் சொற்கள் எழுதப்பட்டுள்ளது. மற்றும் கோயில் உள்வீதி மண்டபத்தின் அருகிலும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட கற்தூண் காணப்படுகின்றது. இதே போல் கோயிலின் வேறொரு இடத்தில் மூன்று கல் உரல்களும் காணப்படுகின்றது. இக்கோயிலிற்குத் தேவையான அரிசி இவற்றிலே இன்றளவும் குற்றப்படும் வகையில் பாவனையில் உள்ளன. இவ் உரலில் 'மணிநாகன் பள்ளி' என்று எழுதப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட தொல்பொருட்களை ஆராய்ந்த பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள். இவ்விடம் நாகரின் ஆளுகைக்குட்பட்டிருந்தது என்றும் அவர்கள் உருவாக்கிய வழிபாட்டுக்கு, கோயிலின் தேவைக்களுக்காக இவற்றை உருவாக்கியிருக்க வேண்டும் என்றும், இது நாகரின் தொழில்நுட்பத் திறனையும் காட்டி நிற்கின்றது என்றும் பின்வருமாறு தனது முன்னைய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

"அவற்றின் வேலைப்பாடு நுட்பமானது. பெருங்கற் பாளங்களை வலிய இரும்புக் கருவிகளினால் வெட்டி, தேவைக்கேற்ப அவற்றைச் செதுக்கி உரல்களாக உருவாக்கி யமை நாகரின் தொழில் நுட்பத்திறனுக்குத் தகுந்த எடுத்துக் காட்டுகளாகும். வேறு சில இடங்களில் கல்லிலமைந்த



உரல்களும் மிகவும் அகலமான மாவரைக்கும் கற்களும் காணப்படுகின்றன. அவற்றையும் நாகரே உருவாக்கினார்கள். ஆயினும் காரைதீவிலுள்ள உரல்களின் செதுக்குத்திறன் அவற்றில் உள்ளதைக் காட்டிலும் மேலானது. இன்று வரை புழக்கத்திலுள்ள மரஉரல்களின் வடிவமைப்பு நாகரால் உருவாக்கப்பட்ட முறையில் அமைந்ததாகும். மேலும் காரைதீவில் இன்று வரை புழக்கத்திலுள்ள கல் உரல்கள் அங்குள்ள சமுதாயம் 2000 வருடங்களை உள்ளடக்கிய காலத்து இடையறாத தொடர்ச்சியினைக் கொண்டுள்ளமையின் சின்னங்களாகும்."

### திருக்கோயில் வரலாறு

நாகரின் வழிபாட்டு எச்சத்தோடும் வரலாற்றோடும் உற்பத்தியான சிவன் கோயிலாகவே இக் கோயிலைப் பார்க்க முடிகின்றது. வரலாற்று அறிஞர்களின் ஆய்வின் கருத்துப்படி, நாகரின் தொல்லியல் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, இப்பிரதேசத்தில் நாகரின் வழிபாட்டுத் தலம் ஒன்று இருந்திருக்க வாய்ப்புள்ளது என்கின்றார்கள். அதற்கேற்றால் போல், இவ்வூர் சிவனடியார் ஒருவரின் கனவில் ஓர் சிவலிங்கம் வெளிப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இக்கோயில் உருவாக்கம் பற்றி இப்பிரதேசவாசிகளிடம் ஒரு செவிவழி மரபுக் கதை நீண்ட காலம் தொட்டு நிலவி வருகின்றது. அக்கதையின் படி, வெட்டுவாய்க்கால் ஆற்றிற்கு அருகாமையில் வாழ்ந்த சிவபத்தரான முருகேசு என்பவருக்கு கனவில் ஒரு சாது தோன்றி, ஆற்றின் கரையோரமாக சிவலிங்கம் ஒன்று புதைந்திருப்பதாகவும், அடியவர்களுக்கு அருள் பாலிக்கும் நோக்குடன் வழிபாடு செய்யும்படி கூறியதனால், மறுநாள் முருகேசு அவர்களும் வில்வ மரத்தடியின் கீழ் புதையுண்டிருந்த இலிங்கத்தைக் கண்டு அதிசயித்துப் போற்றி வணங்கினார். இதுவே பின்னாளில் சிவன் கோயிலாக உருவாகி, 2000 ஆம் வருடம் (27.03.2000) குடமுழுக்கு விழாவும் கண்டது.

இங்குள்ள மூர்த்தி சிவலிங்கமாகவும், கோயில்மரமாக







வில்வமரமும், தீர்த்தமாக இயற்கையான ஆறும் அமைந்து, தலச்சிறப்பும் பெற்றுள்ளது. இக்கோயிலில் மாசிமகத்தைச் தீர்த்த திருவிழாவாகக் கொண்டு பத்து நாட்கள் பெருந்திருவிழாக் கிரியைகளும், பூசைகளும் நடைபெறும். மற்றும் சிவனிரவு, திருவாதிரை, திருவாசகம் முற்றோதல், கழுவாய் வழிபாடு (பிரதோஷம்) ஆகியனவும் வருடாவருடம் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. தற்போது இத்திருக்கோயில் புனரமைப்பு செய்யப்பட்டு, பெருஞ் செழுமையான கோயிலாக உருமாறி வருகின்றது.

**"நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனை**
**சிறு நெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்**
**குறி யொன்றும் இல்லாத கூத்தன் தன் கூத்தை யெனக்கு**
**அறியும் வண்ணம் அருளியவாறு ஆர் பெறுவார் அச்சோவே"**

**- (திருவாசகம் அச்சோப்பதிகம்)**

**திருச்சிற்றம்பலம்.**

# புலம்பெயர் சூழலிலே சைவசமயம் எதிர்கொள்கின்ற

# சவால்களும் வாய்ப்புக்களும்

பாகம் 4



நியூசிலாந்து
சிற்சபேசன்

**முற்பகுதிச்சுருக்கம்:** சிவனை முழுமுதல் கடவுளாகக் கொண்ட வழிபாட்டு முறையே சைவசமயம் என்பதை **“தென்னாடுடைய சிவனே போற்றி”** என்னும் மாணிக்கவாசகரின் வரிகளை மேற்கோள்காட்டி வியாக்கியானம் செய்யப்பட்டது. **“அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்”** என்னும் திருமந்திரப்பாடலை ஆதாரமாக்கி சைவசமயம் ஒரு வாழ்க்கைமுறை என்பது பதியப்பட்டது. புலம்பெயர்சூழலிலே சைவசமயம் எதிர்கொள்கின்ற சவால்களையும் வாய்ப்புக்களையும் வெளிக்கொணரவேண்டியதன் நோக்கம் வரையறுக்கப்பட்டது. அந்நியப் படையெடுப்புக்கள், களப்பிரர்கள், பல்லவர்கள் போன்றோரின் வருகை, சமணம், பௌத்தம் போன்ற பிறசமயப்பரவல், பத்தி இயக்கம், கட்டிடக்கலையில் ஏற்பட்ட திருப்புமுனை என்பவை அலசப்பட்டன. குறிப்பாக, சைவசமயத்தின் கட்டிட மரபில் பல்லவக்கட்டிடக்கலை ஏற்படுத்திய பெறுமதியான மாற்றம் விவரிக்கப்பட்டது. படையெடுப்பின் மூலம் மண்ணைப் பிடிக்க வந்தவர்களை, மண்ணின் மரபுகளை மாற்ற முனைந்தவர்களை சைவசமயம் கையாண்ட பாங்கு விவரிக்கப்பட்டது. **“கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந் தொழும்”** என இறைவனுக்கு வரைவிலக்கணம் வகுக்கின்ற பண்பாட்டின் பலம் சுட்டிக் காட்டப்பட்டது. அழிக்க நினைத்தவர்களையும் அரவணைக்கும் சைவசமயத்தின் உள்ளார்ந்த பண்பு அடையாளப் படுத்தப்பட்டது. இலங்கையின் சைவத்தமிழ்ப் பரப்பிலே ஏற்பட்ட அந்நிய ஆக்கிரமிப்பு, மதமாற்றம் என்பவற்றின் பின்னணிச் சம்பவங்களும், அவற்றினுடைய விளைவுகளும் விவரிக்கப்பட்டன.



இலங்கையின் சைவத்தமிழ் பரப்பு விசாலமானது அல்ல. வடக்கே வானம்பார்த்த பூமி. உவர்நிலம். வளங்கள் குறைவு. அதனால் கல்வித்தேடலில் கூர்மையான கவனம். கிழக்கேயும் மலைநாட்டிலும் தொடர்ச்சியான புவிசார் அழுத்தங்கள். கல்ஓயா தொடங்கி வெலிஓயா-மணலாறு, மயிலந்தமடு-மாதவனை என இடைவிடாத செருகல்கள். அதனால் அடிப்படை இருப்பே அச்சுறுத்தலுக்கு உட்படுகின்றது. அத்துடன், காலாதிகாலமாகப் பேணிவந்த சைவவாழ்வு முறையைச் சொந்தமண்ணிலேயே அனுட்டிக்க முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. அதனால், கணிசமான எண்ணிக்கையிலான சைவத்தமிழர் சொந்த மண்ணிலிருந்து பெயர்க்கப்படுகின்றனர்.

அவ்வாறானவர்களிலே பலர் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். அத்தகைய புலம்பெயர்சூழலிலே சைவசமயம் எதிர்கொள்கின்ற சவால்களையும் வாய்ப்புக்களையும் ஆராய்வதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும். புலம்பெயர்ந்தோர் என்பது அகண்டு விரிந்த சொற்பதமாகும். அதனால் வரையறை அவசியமாகிறது. இக்கட்டுரையிலே, புலம்பெயர்ந்தோர் என்பது இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்தோரை மட்டுமே குறிக்கின்றது.

புலம்பெயர்வை இரண்டு வகையாகப் பார்க்கலாம். ஒன்று, நிரந்தரப் புலப்பெயர்வு. மற்றையது, தற்காலிகப் புலம்பெயர்வு. நிரந்தரப் புலம்பெயர்வு பெரும்பாலும் மேற்கத்திய தேசங்களை நோக்கியதாகும். தற்காலிகப் புலம்பெயர்வு காலவரையறையைக் கொண்டதாகும். பெரும்பாலும் மத்திய கிழக்கு அல்லது ஆபிரிக்கா நோக்கியதாகவே காணப்படுகின்றன. தற்காலிகமாகப் புலம்பெயர்வோர் பெரும்பாலும் ஒருகட்டத்தில் சொந்தமண்ணுக்குத் திரும்புகின்றனர். சிலர் மேற்கத்திய தேசங்களை நோக்கிய நிரந்தரப் புலம்பெயர்வைத் தெரிவுசெய்கின்றனர்.

சைவத்தமிழ் மக்களின் எண்ணிக்கை, நிரந்தரப் புலம்பெயர்வு நிகழ்கின்ற தேசங்களிலேயே, கணிசமாகக் காணப்படுகின்றது. அத்தகைய சூழலிலே, தனித்துவமான சைவத்தமிழ் கோயில்கள் அமைகின்றன. சைவசமயச்சடங்கு, சம்பிரதாயங்களைக் கடைப்பிடிப்பதற்கான வாய்ப்புக்களும் ஏற்படுகின்றன.

சைவத்தமிழரின் பாரம்பரிய மண் ஆக்கிரமிக்கப்பட்ட போது பிறமதங்கள் திணிக்கப்பட்டன. கட்டாய மதமாற்றங்கள் ஆரம்பமாகின. அதிலே சமணம், பௌத்தம் போன்றவை, கோட்பாடு என்ற வகையில் ஒத்த தன்மைகளைக் கொண்டவை. சைவசமயத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டவை அல்ல. அதனால் காலவோட்டத்தில் சைவசமயத்தின் ஆளுமைக்கு உட்பட்டன.

சைவவழிபாட்டு முறையின் கூறுகளைப் பௌத்த வழிபாட்டுத்தலங்களிலே காணலாம். அங்கு சைவக்கடவுளரையும் வழிபடுகின்றனர். ஆனால், சைவ வழிபாட்டுத்தலங்களில் பௌத்த சின்னங்கள் அமைக்கப்படுவதில்லை. அதற்கு திருவதிகை வீரட்டானம் விதிவிலக்காகும். அங்கு கௌதம புத்தருடைய பெரிய சிலை ஒன்று இன்றும் கூடக் காணப்படுகின்றது. திருவதிகை வீரட்டானம் தவிர்ந்த பிற சைவ வாழிபாட்டுத்தலங்களிலே, பௌத்த சின்னங்கள் தொடர்பான தெளிவான தகவல்கள் இல்லை. திருவலஞ்சுழி வலஞ்சுழிநாதர் ஆலயத்திலும் கௌதம புத்தருடைய சிலை இருந்திருக்கின்றது. அஃது, தற்போது சென்னை எழும்பூர் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றது.

ஒன்பதாம் மற்றும் பத்தாம் நூற்றாண்டில், தமிழ் நாட்டில் பௌத்த மதம் பரவிய காலத்திலேயே, சைவ வழிபாட்டுத்தலங்களிலே கௌத மபுத்தரின் சிலைகள் நிறுவப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

அத்தகைய ஒரு செயற்பாடே இலங்கையிலேயும் காணமுடிகின்றது. பிரித்தானியாவிடமிருந்து விடுதலையாகிய பின்னரான கடந்த எழுபது ஆண்டுகளுக்கு மேலாகவும் அஃது தொடர்கின்றது. முள்ளிவாய்க்காலுக்குப் பிந்தைய காலகட்டத்தில் உக்கிரமடைந்திருக்கின்றது. கௌதமபுத்தரின் பெயரால் ஆக்கிரமிப்புக்கள் வேகமடைகின்றன. பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார், கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார், வெடுக்குநாறிமலை சிவன் என சைவ வழிபாட்டுத்தலங்கள் தொடர்ச்சியாக இலக்கு வைக்கப் படுகின்றன.

அந்தவகையிலேயே, சைவத்தமிழ் மரபுக்கு இலங்கையில் பௌத்தமதம் சவாலாகின்றது. அத்தகையநிலை தமிழ் நாட்டில் இல்லை. அதேவேளையில், தூரதேசங்களிலிருந்து ஆக்கிரமிக்க வந்த கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்கள் சைவத் தமிழ்மரபுக்குக் குந்தகம் ஏற்படுத்துகின்றன. அதனால் ஏற்படுகின்ற சவாலை பாக்கு நீரிணைக்கு இருமருங்கிலுமேயுள்ள சைவத்தமிழ்மண் நாளும்பொழுதும் எதிர்கொள்கின்றது. அரசியல் பின்புல அனுசரணையுடன், மதமாற்றங்கள் வகைதொகையின்றி நடைபெறுகின்றன.

இவ்வாறாக, சைவத்தமிழ் மண்ணில் காணப்படுகின்ற தற்கால அச்சுறுத்தல்களை இங்கே சுட்டிக்காட்டுவதற்கு ஒருகாரணம் இருக்கின்றது. சைவத்தமிழ் மண்ணில் காணப்படுகின்ற அச்சுறுத்தல் சூழ்நிலைக்கு நேரெதிரானதாகவே, புலம்பெயர்ந்த தேசங்களிலேயான சூழல் காணப்படுகின்றது. ‘சைவத்தமிழ் வாழ்வுமுறைக்கான வாய்ப்பு புலம்பெயர்ந்த தேசங்களிலே நிறைவாகவே காணப்படுகின்றன.’

மேற்கத்திய தேசங்களிலே கலாச்சாரப் பன்மைத்துவம் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. அதற்கு சனத்தொகைப் பரம்பலில் ஏற்படுகின்ற மாறுதல்களும் துண்டுகோலாகின்றன. அந்தவகையிலே, கலாச்சாரப் பன்மைத்துவத்தை ஏற்றுக் கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாகவும் சொல்லலாம்.

காலனித்துவக் காலத்தில், ஐரோப்பியர் கடல்கடந்து சைவத்தமிழ் மண்ணுக்கு வந்தனர். தங்களுடைய, ஐரோப்பிய வாழ்வுமுறையைச் சைவத்தமிழ் மண்ணிலே திணித்தனர். தங்களுடைய மொழியை, மதத்தை, கலாச்சாரத்தைப் புகுத்தினர். காலச்சக்கரம் சுழன்றது. தற்போது, சைவத்தமிழர் மேற்கத்திய தேசங்களுக்குப் புலம்பெயர்கின்றனர். அங்கெல்லாம் தம்முடைய பாரம்பரிய வாழ்வுமுறைகளை அமைக்கின்றனர்.

கிறிஸ்துவமதத்தில் நம்பிக்கை கொண்ட ஐரோப்பியர்களின் எண்ணிக்கை மேற்கத்திய சூழலிலே குறைகின்றது. அதனால், தேவாலயங்களின் தேவை குறைகின்றது. குறைந்த எண்ணிக்கையிலான வழிபாட்டாளர்களைக் கொண்ட தேவாலயங்களைப் பராமரிப்பது பாரிய பணச்சுமையாகின்றது. ஐந்து தேவாலாயங்கள் இருந்த ஒரு சுற்றாடலில், ஒரு தேவாலயமே போதுமென்னும் நிலை ஏற்படுகின்றது. அதனால், தேவாலயக் கட்டிடங்கள் விற்கப்படுகின்றன. அவை கிறிஸ்துவம் அல்லாத பிறசமயத்தவர்க்குப் புதிய வாய்ப்புக்களை உருவாக்குகின்றன. அத்தகைய கட்டிடங்கள் பழமைவாய்ந்தவை. பிரமாண்டமானதாகவும் காணப்படுவன. சைவத்தமிழரும் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். கிறிஸ்துவத் தேவாலயக் கட்டிடங்களைக் கொள்வனவு செய்கின்றனர். அத்தகைய கட்டிடங்களிலே சைவ வழிபாட்டுத்தலத்துக்குத் தேவையான மாற்றங்களைச் செய்கின்றனர். ஐரோப்பாவிலே, அநேகமான சைவ வழிபாட்டுத்தலங்கள் ஒருகாலகட்டத்தில் அந்தவகையிலேயே உருவாகின. வடஅமெரிக்கா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற பிரதேசங்களில் அவ்வாறான சூழ்நிலை அதிகம் இருந்ததாகக் கருதமுடியவில்லை. ஆனால், அங்கேயும்கூட கிறிஸ்துவமதத்தை பின்பற்றுகின்ற ஐரோப்பியர்களின் எண்ணிகையில் தேய்வு காணப்படுகின்றது. அதனையே பரந்துபட்ட மேற்கத்திய தேசங்களிலே காணப்படுகின்ற நிலையாகக் கருதமுடிகின்றது.

இவ்வாறாக, மேற்கத்திய சூழலிலே ஐரோப்பியர்களிடையே கிறிஸ்துவமதத்தில் நம்பிக்கை கொண்டோரின் எண்ணிக்கை குறைகின்றமைக்கு இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்டலாம். ஒன்று, கிறிஸ்துவத்தில் நம்பிக்கை இழக்கின்றமையாகும். மற்றையது, பிறமதங்களில் ஏற்படுகின்ற ஈர்ப்பாகும். கிறிஸ்துவம் மீதான நம்பிக்கையீனம் படிப்படியாக அதிகரிப்பதான தோற்றப்பாடே ஏற்படுகின்றது. அதற்கான காரணங்கள் குறித்த கேள்விகள் எழுகின்றன. அவைதொடர்பில் பல்வேறு ஊகங்கள் காணப்படுகின்றன.

மேற்கத்திய அமைவிலே மனிதர்கள் தனியன்களாக ஆக்கப்படுகின்றனர். அதனால் தனிமனித விருப்பு ஃ வெறுப்பு மட்டுமே முக்கியம் என்னும் நிலை ஏற்படுகின்றது. அஃது தனிமனித சுதந்திரம் எனக் கொண்டாடப்படுகின்றது. பொருளீட்டுவதில் மிதமிஞ்சிய கவனம் குவிக்கப்படுகின்றது. அதனால் எதையோதேடி தொடர்ச்சியாக ஒடுகின்ற மனநிலை உருவாகின்றது. இத்தகையவற்றின் கலவையினாலே ஒருவகையான வெறுமை ஏற்படுகின்றது. பிறமதங்களிலே புதுமையைக் காண்பதற்கு, அதனையும் ஒரு காரணமாகக் கருதலாம்.

அவ்வாறானவர்களிலே, இஸ்லாமிய மதத்தில் காணப்படுகின்ற தீவிரத்தன்மையினால் சிலர் அதிலே ஈர்க்கப்படுகின்றனர். வேறு சிலர் இந்திய மதங்களில் காணப்படுகின்ற சாந்தம் அல்லது மென்தன்மை காரணமாக



ஈர்க்கப்படுகின்றனர். அதனால், சைவத்தமிழ் பழமைக் குடிகள் அல்லாதோரும் சைவவழிபாட்டு முறையில், சுயவிருப்பிலேயே, ஈடுபடுகின்றமை அதிகரிக்கின்றது. அவை எண்ணிக்கையில் குறைவு. ஆனால், நம்பிக்கையில் பெருமளவிலேயே தெரிகிறது.

ஆக, சைவத்தமிழ் பழமைக் குடிகள் மட்டுமன்றி, சைவத்தமிழ் பழமைக் குடிகள் அல்லாதோரும் சைவவழிபாட்டு முறையை ஆராதிக்கின்றனர். அதனைப் புலம்பெயர்சூழலிலே சைவசமயம் எதிர்கொள்கின்ற வாய்ப்பாகவே கருதமுடிகின்றது.

(வளரும்)

# தென்னாட்டு நிகழ்வுகளும் படைப்புகளும்



ஐப்பசி கழுவாய் வழிபாடு (ஐப் 16)



ஐம்பூதநாதருக்கு சங்கு நீராட்டு (ஐப்பசி 8)



தென்னாடு ஐப்பசி இதழ் வெளியீடு மற்றும் நிறைமதி பூசை








விடைக்கொடிச் செல்வர் சிவத்திரு.தனபாலா வருகை





தென்கயிலை சிவா அவர்கள் தென்னாடு வருகை



யாழ் இந்து ஞானலிங்கேச்சரர்
3ம் ஆண்டு நிறைவுச் சங்கு நீராட்டு



திருமூல நாயனார் குருபூசை

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் பதின்நான்காவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு” , சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு வண்பண்ணை தயா அச்சகத்தில் அச்சிடப்பட்டு நளி நல்லோரை கார்த்திகைத் திங்கள் 2ம் நாள் நிறைமதி அன்று (18-11-2021 வியாழக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம்.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 75 653 3111 | மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org